டு[illegible]வ. பொன்னுசாமிமுதலியார்பாடியது.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகினிலுயிர்கணலம்பெறவினைறவ.................. ௧
னொருருக்கொடுவிவணுதித்தாங்..................... ○
குற்றமெய்க்குருவர்ந்தத்துவராய..................... ○
ருள்ளுறமிருளொருங்கறநன்......................... ○
னலன்றரவிசைத்தசிவன்னபோத...................... ○
ஞானநூலின்பயனனைத்து............................ ○
நாவலர்முதன்மந்திபாவருமெளிதி.................... ○
னன்குணர்ந்திடவெளிக்துணையாத்.................. ○
தலனெலாம்புகழவியம்றினன்யார்க்குந்.............. ○
தன்னுடனிலையதுவிளக்கித்........................ ○
தங்குதம்பரத்தையங்கையிற்கனிபோற்................ ○
றகவுறத்தெரிக்கும்வேதாந்த......................... ○
மிலகுசித்தாந்தநூலருடாயு......................... ○
மாணவரின்மரபுதித்திண்........................... ○
டிருந்தவத்தோங்கருணைசலநாயகனு.................. ○
மொனுமியம்பெயரினனே............................ ○

கவிராயர் கோபாலகிஷ்ணபிள்ளை பாடியது.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காட்சிதரும்பொருள்காணக்கடவுள்விழியளித்ததுபோற்
கருதுஞ்சர்வ...................................... ○
சாட்சியுறும்பொருளையறிந்திடமாந்தர்தமக்குசசி.. ○
வன்னபோத.. ○
மாட்சிகொணும்குறையியம்பிவழங்கினன்றுயுமா.... ○
னவன்பதத்தைத்.................................. ○
தாட்சியறத்துதியருணைசலநாயகனொனுமா........ ○
தவத்தினனே...................................... ○

கணபதி துணை.

சுத்தாத்வைத வேதாந்தாசாரியராகிய தத்துவராயஸ்வாமிகள் அருளிச்செய்த சசிவர்ணபோதம் இந்நூல் வேதாந்தமோ சித்தாந்தமோவென, ஐயுறுபவர்கள், அவ்வையம் நீக்கப்புகின் இந்நூலை ஆதியோடந்தமாக ஆராய்ந்தறியுமிடத்து வேதாந்தசித்தாந்தமாகியவிவ்விருபொருளுஞ் சமரசமாக அறிவிற்குப் புலப்படாமற் போகமாட்டாது. அஃதெவ்வாறெனின், அது நீயென்பது வேதம். நீயதுவென்பது ஆகமம். அன்றியும், சச்சிதானந்தபிரமத்தையறிவிக்குமறிவாகிய சுத்தவறிவு தானேபிரமமென்று சொல்லும்வேதம் சச்சிதானந்தசிவத்தை அறிவிக்கும் உயிராகிய வறிவிற்குமறிவே சிவமெனச்சொல்லும் ஆகமம், சீவத்வநீங்கிப் பிரமத்தைப் பிரியாத நிலைக்கும், தற்போதநீங்கிச் சிவத்தைப் பிரியாத நிலைக்கும் வேதாகமவாக்கிய மொன்றுபட்டிருக்குமென்பதை அநுபவத்தாற் கண்டுணர்க. அன்றியும், வேதாந்தம்-சித்தாந்தம்-நாதாந்தம்-போதாந்தம்- யோகாந்தம் - கலாந்தம்- என்னும் ஆறந்தத்தினும் விளங்கிநின்றபொருள், ஒன்றன்றி வேறன்று. அவ்வாறென்றே

ணின், பெறுபவனும் பெறப்போகின்ற பே
றுமில்லை. இரண்டெனின் பதமுத்தியேயன்றி
ஐக்கியமுத்திகூடாது. ஆதலின் ஆத்மபோ
தப்பிரிவி லிரண்டாகவும், ஆத்மபோத வொ
ழிவிலொன்றாகவும், இருத்தலின் ஏகம் இரண்
டென்று திருத்தலே உண்மையாம். இவை
யாவும் சற்குருவினாலுங் கற்றுவல்லசான்றோ
ராலுஞ், சாத்திரங்களாலுமுய்த்துணர்ந்தறிக.
அதனால் வேதாந்த சித்தாந்த சமரச பாவத்
தையுடையதே இந்நூற்றுணிவாதலின், இஃ
தியாவர்க்கும் பயன்படுமாறு கருதி இதற்
குரைசெய்து வெளிப்படுத்தலாயிற்று.

உ

சிவமயம்.

ஹர:

௧ # சசிவர்ணபோதம்.

கணபதிதோத்திரம்.

சுபமிகுத்துள தூயவர்போற்றிய - - *
இபமுகத்திறைவன்பதமேத்துவாம். - *

(இதற்குக்கருத்து.)

குணமதியோர்கள்குறித்தவையருளுங் - *
கணபதிதிருவடிகருதியுரைத்தது. - - *

(இதன்பொருள்.)

[சுபமிகுத்துள தூயவர்போற்றிய] என்பது நன்மையாகிய ஞானாநந்தப்பூரிப்பினையுடைய சுத்தராகிய முனிவர்களாலே வணங்குதற்குரிய [இபமுகத்திறைவன்பதமேத்துவாம்] ஆணவாதி மதங்களைப் பொழியும் அகங்காரமான வேழத்தை யகற்றுதற்கு ஆனைவதனங் கொண்டெழுந்தருளும் விநாயகக் கடவுளினது திருவடித் தாமரைகளை வணக்கஞ் செய்வாம். என்றவாறு.

என்னவே மூலகாரணமான பிரணவஸ்வ ரூபியைத் துதிக்கவே இந்நூலினுரைத்தருளிய ஞானார்த்தத்தை சரமணிபோலக் காட்டுமென் பதுபெற்றும்.

(இதற்குதாரணம் பலதிரட்டு.)

கவுட்குழி மாமதகுதி மர்தருவ்மத நீர்பாச்சிக்.....௦
கருதுறமெய் யடியருளப் புலத்தேஞ் சக்கரமா....௦
நவப்பெருவித்திட்டகனிமேழுமன் பாழுவேலைய......௦
நசைவிடையக்கினிமனைறுககா தயனைகசரத்திங்....௦
கலக்களைகட்டேறஞாணப்பயிரோத்திபெயன்றும்........௦
யானெனுமாணவமேழமனுகாதுதாரத்தி.........௦
யுவப்பறமெய்ச்சிவபோகம் விளைவிக்குங்கனிமனை..௦
யுளமெனக்கூட்டுத்தும் பிரிவறவைத்துப்யாம்......௦

என்பதருண்யகாலங்க.

மேல் நூற்பெயர்கூறுகின்றார்.

அசியென்றுமேக வயிக்கியங்கூட்டிடுஞ் *
சசியன்னபோதமித்தமிழதாகுமே - *

(இதன்கருத்து.)

பவவினைபகன்று பரமுறவான்செயல் - *
நுவலுவதாகிய நூற்பெயருரைத்தது. - *

(பொருள்.)

அசியென்றுமேக வயிக்கியங்கூட்டிடும்.

மூன்றாவது சாமவேதத்தின் முடிவில்விள ங்காநின்ற தத்வமஸியென்ற மூன்றுபதமா ய்விளங்குகின்ற மஹாவாக்கியத்தில் மூன்றா வதுபதம் அஸிபதம் அவை மற்றயிரண்டு

பதத்தையும் ஒன்றாகக் கூட்டிவைக்கின்ற அர்த்தத்தை - சுசிவன்னபோதமித்தமிழதாகுமே - சுசிவர்ணனென்னு மாணாக்கனுக்குப் போதனைசெய்தருளியதை யுடைப்பதாலிந்தத்தமிழ்நூலிற்குச் சுசிவன்னபோதமென்று பெயராயிற்றென்றவாறு. இந்தமாணாக்கனுக்குச் சுசிவர்ணனென்று பெயர்வந்ததற்குவழியேதெனில், நம்நாட்டினில் விருத்தாரண்யமென்னு நகரத்தில் சாந்தசீலனென்னும் பெயரினையுடைய ஓர்வேதியன் விரதசீலையென்னும் பத்தினிசகிதனாய் இல்லறஞ்செய்துவருநாளில் பாபமெல்லாந்திரண்டோருருவாகப்பிறந்ததொத்த தோர்புத்திரன் றோன்றினன். அவன்சனிக்கும்பொழுதே இரணமுந் துர்க்கந்தமும்பொருந்தி சந்திரனையொத்தநிறத்தினையுடைய வெண்குட்டரோகியாயிருந்தமையால், சுசிவர்ணனென்னுங் காரணப்பெயராயிற்றெனவறிக.

மேல் நூற்பயன் கூறுகின்றார்.

அலகையச்சமறவகவான்களும் - *
உலகின்முத்தி பெறும்பரிசோதுவாம் *

(கருத்து)

பாசப்பிசாசமும்பாபமுநீங்கப் - *
பேசருமுத்தி பெறும்வகையுணர்த்தரு *

(பொருள்.)

அலகையச்ச மறவக வான்களும் - பைசாசத்திற்கொப்பாகிய ஆசையினது பயம் நீங்கப் பாபிகளானபேர்களும் - உலகின்முத்துமெபரும்பரிசோதிவாம் - இவ்வுலகத்தின்கண்ணே முத்தி பெற்றுக்கொள்ளுகின்ற வியல்பினைச் சொல்லுவாம். என்றவாறு. (க)

அலகையென்றதை ஆசையாகிய பைசாசமென்றதற்கு வகையேதென்னில், தேகாதி பிரபஞ்சத்திற்கு வித்தாகிய - பொன் - மண் - பெண் - ஆசையெனவறிக. அப்படி ஆசையை பைசாசமென்றதற்கு உதாரணம்,

தாயுமானஸ்வாமி ஆனந்தக்களிப்பு.

பேசாவிடும்பைகள் பேசிச் சுத்தப்பேயங்களாகிப் பிதற்றித்திரிந்தேன் - ஆசாபிசாசைத் துரத்தி யைய னடியிணைக்கீழே யடக்கிக்கொண்டாண்டி. என்றும்,

சின்மயானந்தகுரு.

அவ்வியமிருக்குநா ளெனின்றவாணவம் *
அடைந்திட்டிருக்கலோபம் - *
அருளிலமைகூடசகலந்துள்ளிருக்கமேல் *
ஆசாபிசாசமுதலாம் - - *

வெவ்வியகுணம்பலவிருக்குமென்னறிவுடு *
மெய்யநீவீற்றிருக்க - - *
விநியில்லையென்னிலோபூரணனெனும்பெயர்
விரிக்கிலுனாவேறுமுளதோ - *

கவ்வுமலமாகின்றநாகபாசத்தினாற் - *
கட்டுண்டவுயிர்கண்மூர்ச்சை - *
கடிதகலவலியவருஞானசஞ்சீவியே - *
கதியானபூமிநடுவுட் - - *

செவ்வியின்வளர்ந்தோங்குதிவ்யகுணமேருவே
சித்தாந்தமுத்திமுதலே - - *
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே - *
சின்மயானந்தகுருவே. - - *

(என்றும்,)

ஆங்காரமானகுலவேடவெய்பேய்பாழ்த்த *
வாணயத்திலும்வலிதுகாண். (என்றும்)

(மோகவதைப்பரணி.)

போகமாம்வடிவுள்ளவாறனுபோகமாகுதலிற்றியே.. ○
பேதமாகியவாதமேபகர்பேய்களைச்சிலபேசுவாம்....○

(என்றும்) (ஒழிவிலொடுக்கம்.)

நாயேயிவீழ்ந்தெதண்டாக்ககிலேன்ஞானிக்குப்.... ○
பேயாஞ்சகம்பழிக்கென்பேணுகிலேன்றேயார்.... ○
பெருமைசிறுமையில்லைப்பின்னுமுன்னுமில்லை........ ○
வாவந்தவேண்டியசெய்வார் ....○

என்றும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க எனில் பேயினிடத்துப் பயமுண்டாகுதலியற்கையாம். ஆசையினிடத்துப் பயமுண்டென்பதற்கு வகையெங்ஙனேயென்னில் பேயினிடத்துண்டாகிய துற்குணம் ஆசையினிடத்துமுண்டென்பதை அநுபவத்தாற் கண்டுணர்க. அகவான்களு மென்பதற்குப் பாபநீங்கி முத்தியையடைவானென்று பொருட்படுத்தில் ஒருவன்செய்தபுண்ணியபாபம்செய்தவன் அநுபவித்துத் தீரவேண்டுமே தவிர அவையநுபவியாமல் நீங்குகைக்குவகையெப்படியென்னில், பரிபூரணமேதானென விரண்டறக்கலந்த ஞானவான்களது திருநோக்கமுறவே பாபங்களும் ஆசாபிசாசமுநீங்கிப் பிறவாநெறியாகிய சாயுச்சியம்பெறுவானென வறிக. அப்படிநோக்கமுண்டாகவே பாபநீங்குமென்பதற்குஉதாரணம்.

(திருவிளையாடல்.)

கொலைப்பழிசேர்ப்பட்டார்க்குறங்கியாண்முகங்கண்டே
வலைப்படுமுழுத்துசாம்பியழிவதேதென்பார்ப்பானென்ன (ட
கலைப்பட்டுதிங்கள்வேணிக்காளைவாருட்கணோக்கந் ௦
தலைப்பட்டச்சிறுகுபாவத்தணிந்துதன்னறிவுதோன்ற ..௦

(என்பதனாலும்) இச்செய்யுளுக்குப்பின்வருஞ்செய்யுளானுங்காண்க.

ஞானிகளினது பெருமைமேலருளுகின்றார்.

புணர்ந்தபாவ மெலாம்பரிபூரண *
முணர்ந்தஞானி விழிபடவோடுமே. *

(கருத்து.)

ஞானிகடோக்குறி னண்ணியதீவினை - *
யானவெல்லாமகன் றிடுமென்றது - *

(பொருள்.)

பரிபூரணமுணர்ந்தஞானிவிழிபட - எங்கு நீக்கமறநிறைந்த பரிபூரணமேதானென விரண்டறக்கலந்த ஞானிகளினது திருக்கடோக்கமுண்டாகவே; புணர்ந்தபாவமெலாமோடுமே. ஒருவனைச்சூழ்ந்திருந்த பாவங்களெல்லாமகன்றோடிப்போமென்றவாறு - - (உ)

பிராரத்வம் அனுபவிக்கையிலிதாகிதத்தாலவருகிற புண்ணியபாவவினைகளைப் புணர்ந்த பாவமெலாமென்றது. திருநோக்கத்தால் பாப நீங்குமென்பதற்குதாரணம்.

(வாதவூரர்புராணம்.)

விரிந்தசஞ்சித வினைகளன்புடனும் - *
விழிக்கவெந்தது விரும்பிமுற்சனனம் - *
புரிந்தவல்வினை யுடலுடனகலும் - *
புந்திசேரருள்வரு வினைபோக்கும் - *
அருந்துமப்பொரு ளுயிருடப்புனதே - *
யல்லநம்மன வாகுமிங்குனைப்போல் - *

இருந்தநம்பெரு வடிவைநின்கருத்தி - *
லிருத்துவாய்பொருளிதுவெனவுரைத்தான் *

(என்பதனாற்காண்க.) அப்படி ஞானிதனா து திருநோக்கத்தினாலே மாணாக்கனது பாபத் தைநீங்கிப் பிறவாநெறியைப் பெறசசெய்ததந் ற்குப் பூருவநடந்த இதிகாசம் அருளிச்செய் கின்றார்.

எழிலாருஞானிபுகழென்னைகூற - *
வுயர்வீடிவன்செல்வழிசெய் - *
தொழிலாளர்செய்கை யதுகேளுமுன்னை *
யிதிகாசமொன்றுசொலவே - *

(கருத்து.)

மேவுஞானத்தினால் வீடிவன்சென்றுற *
மேவியமுன்கதை யியம்புதுமென்றது. *

(பொருள்)

எழிலாருஞானி புகழென்னைகூறல் - அழகு நிறைந்தஞானவான்களினது கீர்த்தியையான் சொல்லத்துணிந்ததென்னகாரணம். உயர்வீ டிவன்செல்வழிசெய் - தொழிலாளர் செய்கை யது. மேலானமோக்ஷவீட்டை இந்தச்சீடன் பெறும்படி செய்யும் ஆசாரியர் அனுக்கிரக த்தொழிலின்செய்கையாகிய- முன்னையிதிகா சமொன்றுசொல்லக்கேளும்-பூர்வநடந்தகதை

யொன்றுண்டு சொல்லுகின்றனங் கேட்பீர்கள் என்றவாறு. (௩)

பிரமதேஜசு சொலிக்கின்றமையால், எழிலாருஞானியென்றார். ஆயிரநாவுடைய சேஷனாலுஞ்சொல்லமுடியாதவை யென்னொருநாவினுக்கடங்குமோவென்பார் (புகழெவ்வாறு றவென்றார்.) இவையெல்லாஞ் சுட்டு சீடனை நோக்கிற்று சீடன்பாபநீங்கி முத்திசேரும்வகை செய்தற்குரியவராகையால் ஆசிரியரைத் தொழிலாளரென்றார்.

(ஞானிபுகழென்பதற்குஉதாரணம்.)

(ஞானவிர்தம்)

ஞாலமுமண்டவன்றலைமிசைசுமப்பன் ❋
ஞானிவேண்டுவதெல்லாம் - - ❋
ஆலமுண்டவனவன்பின்னே - - ❋
திரிகுவனவனடித்துகட்கள்றே - ❋
சிலமன்னரு மற்றுளதேவருந் - ❋
திசைதிசை பணிந்தேற்றக் - ❋
காலிரண்டையுந் தலைமிசைவையெனக் ❋
கழறுவன் கமலநான்முகத்தோன் - ❋

(என்பதனாற்காண்க.) ஞானவான்களினதேவல்செய்பவன் வரலாறுரைத்தமேலருளிச்செய்கின்றார்.

தந்தாயமற்ற பரனேவல்செய்த - *
வவனுற்றபேறுதனைமுன் - *
செந்தாமரைக்கண் முதல்வர்க்கெமண்ண *
திருவாய்மலர்ந்தநிதுவே - *

(கருத்து)

ஏவன்மெய்ஞ்ஞானிக்கியன்றவன்பேற்றினைப் பூவுறைவாற்கரன்புகன்றதென்றுரைத்தது. *

(பொருள்)

முன்எம்மண்ணல் தந்தாயமற்றபரனேவல் செய்த வவனுற்றபேறுதனை - - *

பூர்வத்தில் எம்மையாண்டபரமசிவம். தம ஆதாயத்திரையவினைகளில் நீங்கிப்பரத்திற்கொப்பாகிய பரஞானிகளினது ஏவற்பணிசெய்த சீடனடைந்தபற்றினை - செந்தாமரைக்கண்முதல்வற்குத் திருவாய்மலர்ந்தநிது. செவந்த தாமரைபுஷ்பத்திணிடத்தில் இருக்கும் பிரமதேவருக்குத் திருவாய்மலர்ந்தருளியது இந்நூலிற்சொல்லிய அர்த்தமென்றவாறு. (ச)

தாபத்திரையமாவது, ஆதிதெய்வீகம்- ஆதிபௌதிகம்- அத்யாத்மீகம் என மூவகையாம். அதில் ஆதிதெய்வீகமாவது, மாதாவின் கருப்பத்திலிருக்கும்போது உண்டான வியா

சனஞ்சநநமாணத்தின் உண்டான வியசனம்-இயமதண்டனை நரகத்தில் உண்டான வியசனம்-[ஆதிபௌதிகமாவது] குளிர்-வெப்பம்-மழை-காற்று-மின்னல்-இடி சுவர்விழுதல்-கல்விழுதல்-இவைகளால் வருந்துக்கம் [ஆதியாத்மிகமாவது] சரீரத்தினும்-மனத்தினும் துக்கப்படலெனவறிக. ❋

(பரமஞானிக்குதாரணம், திருமந்திரம்.)

ஞானத்தின் மிக்கதவநெறி நாட்டில்லை ❋
ஞானத்தின் மிக்கசமயமுநன்றன்று ❋
ஞானத்தின் மிக்கவைநன்முத்திநல்காவாம் ❋
ஞானத்தின் மிக்கார்நரரின்மிக்காரே. ❋

(என்பதனாற்காண்க.)

இவ்விதி நாசத்திற்குரியமாணாக்கனது கதையைமேலருளிச்செய்கின்றார்.

உவமொப்பின் ஞானிவிழிபட்டுமுன்னை ❋
வினைவிட்டுமுத்தியுநகிற் ❋
றவமற்றுவெய்யவினையேபுரிந்த ❋
சசிவர்ணனெய்துகதையே. ❋

(கருத்து)

ஞானிநோக்குறவினைநாசமுற்றுயர்பதந் ❋
தானுறுசசிவர்ணன்சரித்திரமென்றது. ❋

(பொருள்.)

உலகிற்றவமற்று - இவ்வுலகத்திலுள்ளவுந ல்வினைசெய்யாதவனாகி - வெய்யவினையேபுரிந் தசிவர்ணன் - கொடியதாகிய பாபவினைசெய் தசிவர்ணனானவன் - உவமொப்பின்ஞானிவிழி பட்டு - உவமித்தற்குக் கூடாத ஞானவான்றிரு க்கண்ணருள்பெற்று - முன்னைவினைவிட்டு முத்தியெய்துகதையே - பூர்வஞ்செய்த பாபவி னைகளில் நீங்கிமோக்ஷத்தை யடைந்தகதையி துவென்றவாறு. (ரு)

ஒப்பற்றபிரமமாகியஞானியென்பார்உவமொ ப்பில்ஞானியென்றார் - மேல்சிவர்ணன்வினை களின் செய்கையை அருளிச்செய்கின்றார்.

ஏமம்புகல்வாருளபாதகராம் - *
யாவர்க்குளுமிக்கவருமிவன் - *
நாமம்புகல்வார்குலமும்மெரிவாய் *
நரகம்புகுமாறுநடர்த்தனனே. - *

(கருத்து)

பாதகர்தம்மினும்பாதகனிவன்பெயர் *
ஓதினுநரகுறுமிவனடையென்றது. - *

(பொருள்.)

ஏமம்புகல்வாருள - இருளைநேராகச்சொ ல்லப்பட்டநெருப்பனைதினையுடைய - பாதகர்

ம்-யர்வர்க்குமிக்கவனாகுமிவன் - மகாபாதகங்களைச்செய்யுங் கீழ்மக்களென்றயாவர்க்கும்உயர்ந்தவனாகிய இவன்-நாமம்புகல்வார்குலமுமெரிவாய் நரகம்புகுமாறு நடந்தனனே-தன்பெயராற் சொல்லப்பட்டவர்களுடைய குலமெல்லாமும் அழற்பிரபையாகியமாபூதியென்னு நரகத்தையடையும்படி நடந்தனனென்றவாறு. (௯)

இவன்பாபத்திற்குதாரணம்
சிதம்பரபுராணம்.

உலகினிற்பாதகருள்ளவெலாந்திரண் - ❋
  டோரெனவாங் - - ❋
கலதியர்தங்களிலக்கிரனாகிய - - ❋
  காதகன்பேர் - - - ❋
இலகவைத்தவர்கோத்திரம்யாவு - ❋
  மெரிநரகின் - - - ❋
உலவநடந்தனன்பாதகர்தங்கட் - ❋
  குயர்ந்தவனே. - என்பதனாற்காண்க.

இந்தச்சசிவர்ணன்வம்சத்தார்
அடைந்தவியல்பை மேலருளிச்செய்கின்றார்.

மலமேவியதீவினையின்வலியால் - ❋
  மகிழும்பர்பதத்திலிருந்தவிவன் - ❋

குலமேவியதென்புலவாணர்களும் - *
கொடிதாநரகங்குடியேறினரோ. *

(கருத்து;)

இவன்பவவலியாலிவன்குலப்பிதிர்க்கள் - *
தவமறநரகஞ்சார்ந்ததுரைத்தது - *

(பொருள்)

இவன் மலமேவிய தீவினையின்வலியால்-இவன்செய்த மும்மல சம்பந்தமாகியகொடியபாதகத்தின்து வலிமையினாலே -மகிழும்பரீபதத்திலிருந்தவிவன் குலமேவிய தென்புலவாணர்களும் -மகிழ்வைத்தருகின்ற சுவர்க்காதிபதங்களிலிருந்த- இவன்குலத்துப்பிதிர்க்களெல்லவரும் -கொடிதாநர கங்குடியேறின ரோ - வேதனையைத்தருகின்ரரவுரவாதி நரகமே குடியேறினரொன்றவாறு (எ,)

(மலமேவியதாவது) ஆணவமலம்-மாயாமலம் - கன்மமலம் - செம்பிற்களிதம்போலவும் - தண்டுலத்தைப்பற்றிய - தவிடு-உமிமுளை-போலவும் ஆத்மாவைப்பற்றி விளைகளையூட்டிவிக்கும்-தண்டுலம் ஆத்மா - தவிடு ஆணவமலம் - உமிமாயாமலம் - முளைகன்மமலமெனவறிக.(நரகமாவது)ரவுரவம்-மகாரவுரவம்-சீதோஷ்ணம் - மஹாஷிலம் - குசி

முகம்-கும்பிபாகம்-தப்தலோஹம்-அஸ்தி பங்கம் - கிருமிநிச்சயம் - பூதிமாங்சம்-ரிதுபங்கம் - இவைகள்முதலான நரகமெனவறிக.

மேலிவன் பவத்தையருளிச்செய்கின்றார்.

மிகமேவிய புண்ணியபாவமெனும் *
வினையின்பயன் மேலொருகான்முறு *
திகமேவருமென்பதனாலுளதா *
மெல்லாவிவினச்சிறையெய்தினவே *

(கருத்து)

வினைவலியிரண்டுமிமேலுறுதியன்ற *
வினையவிப்பவமதி லெய்தினனென்றது *

(பொருள்)

மிகமேவியபுண்ணிய பாவமெனும் வினையின்பயன் - அதிகமாகச்செய்யப்பட்டவினையினது புண்ணியபாபத்தின் - சுகதுக்கங்கள் - மேலொருகான்முறுது - இனிமேல்வருமோர் சுநரங்களில் அநுபவிக்கவாராமல் - இகமேவருமென்பதனால் - இந்தச்சநநத்திற்றானே அநுபவிக்க வருமென்று வேதாகமங்கள் கூறுகின்றபடியே - உளதாமெல்லாவிவினச்சிறையெய்தினை - உண்டாகின்றஎல்லாப்பாபங்களுமிவினைவந்துசூழ்ந்துகொண்டனவென்றவாறு.(அ)

இதமேவருமென்பதற்குதாரணம்.

[ஆத்மபோதம்]

இப்பவமதனிவீட்டிமிருவினைப்பயனளித்தல் ௦
எப்பவத்தெருணமையமிதபமேபெண்ணனர்றே ௦
வொப்புடவினைதெளிந்தாவுடம்பலனளிந்தல்போல..௦
விப்பவமீட்டுபொவமிம்மையேயளிக்குமஃறே......௦
என்பதனுங்காண்க.

(மைந்தனுறுந்துன்பத்தைதந்தைநோக்கிவருத்தமுறுகின்றதைமேலருளிச்செய்கின்றார்)

தன்புத்திரநேயம்விடாமையினாற் - *
றவறுற்றவிவற்பெறுதந்தையுள்நொந் - *
துன்புற்றினியென்னைகொலோபுதல்வன் *
றுயர்தீர்வகையென்றுசுழன்றனனே, *

(கருத்து.)

மைந்தன்மீதன்பால் மனந்தளர்ந்தின்றான்
இந்தநோய்தணிப்பான்றிரிந்தனனென்றது *

(பொருள்.)

தவறுற்றவிவற்பெறுதந்தை- குற்றமானவினைபொருந்தியசசிவர்ணனைப்பெற்றதந்தையாகிய சாந்தசீலன் - தன்புத்திரநேயம் விடாமையினால் - தனது புத்திரன்மீதுவைத்திருக்கின்றஅன்புநீங்காமையினால், புதல்வன் றுயர்தீர்வகையினியென்னையென்று - நமது புத்திரனடைந்ததுன்பநீக்குதற்குமார்க்கமினிநாட்செய்யவேண்டியதென்னவென்று - உளந்துன்பு

ற்றுச் சுழன்றனன் - மனோதுக்கங்கொண்டு
அலைந்து திரிந்தனனென்றவாறு. (௯)

கொல்-ஓ-ஏ-அசை.

இதற்குதாரணம் - சிதம்பரபுராணம்
துன்மதச்சருக்கம்.

தந்தைபின்றநாள் செயினேயுக - ✻
டவிர்ப்பதேதகடனாதலால் - ✻
மைந்தனுக்குறு வினையினாலுளம் - ✻
வாடிநொந்துமகன்றனக் - - ✻
கிந்தநோயைவிலக்குமாறெவ - ✻
னெங்ஙனென்னவெடுத்தவன் - ✻
சிந்தைநொந்து திரிந்துழன்றுயர் - ✻
றில்லையெல்லைசெறிந்தனன் - ✻

என்பதனாற்காண்க.

தந்தைதுயருற்றலையிலுந்தனயன் - வெறு
த்துவாக்கின்றதை பேலருளிச்செய்கின்றார்

ஒன்றாலும்வினைத்துயர் தாப்பட்டதரா ✻
லொழிவிக்கு மூபாயமெனக்கிலைமைந்த ✻
யென்றாலுமொழிந்திடவன்புவிடா ✻
திவனைக்கொடுழன்றன னெங்ஙனுமே. ✻

(கருத்து)

மைந்தன் வெறுத்துவழங்கினுமன்பிறற் ✻
றந்தைவெறுத்திடா துழன்றனனென்றது ✻

(பொருள்.)

வினைத்துயர் தயிப்பதலால் - சசிவர்ணன் றன்பிதாவைபார்த்து ஐயனேயான்செய்தவினையினுல் வருந் துன்பத்தை யாவோயனுபவித்துத் தீர்க்கவேண்டியதாகவிருக்கின்றதேயல்லாமல் - ஒன்றுறு மொழிவிக்கு முபாயமுணக்கிலதேயென்றாலும், மணிமந்திரமருந்தாக ளொன்றினலும் இவ்வியாதியை நீக்குவிக்கும் உபாயம் உனக்கில்லாமற்போய்விட்டதேயென்று புத்திரன் வெறுப்படைத்துசொல்லினும் -இவனன்புவொழிந்து விடாதிவனைக்கொடுழன்றனனெங்கணுமே. இந்தபிதாவானவன் புத்திரவாஞ்சைவிட்டொழியாமையால், இந்தச்சசிவர்ணனை யெடுத்துக்கொண்டு சுழன்றுதிரிந்தனனெந்தவிடத்துமென்னவாறு. (௧)

(தந்தைவெறுப்பின்மைக்குதாரணம்)
பிரமகீதை.

ஊமைந்தரீட்டிய தீவினைபலவெனு - ※
மனந்தனிற்கொடாமற் - ※
சிந்தைதம்தளி கூர்ந்துளம்பரிந்துநன் ※
சேயினைப்பாராட்டுந் - - ※
தந்தையாயன்புசுரந்தெனையாண்டரு ※

டற்றிடச்சுடர்போல் - *
உற்றதேசிகவடிவில்மெய்ஞ்ஞானமணி - *
மலரடியினிற்றாழ்ந்தான். - *

என்பதனாற்கொள்க.

இப்படி வெறுத்துநாக்கின்றபுத்திரனை முதுகிலெடுத்துவருகிறப்பிதாவைக்கண்டு, ஒருமாதவன் உரைக்கின்றதை மேலருளிச்செய்கின்றார். *

ஒருமாதவன்மற்றிவன்வேதனைகண் *
டொழிவற்றுளவொன்றையுளத்துணரும் *
பரமாகிபஞானிகண்ணுற்றமேல - *
பரமேவிதமென்றுபகர்ந்தனனே. *

(கருத்து.)

மற்றொருமானிடைநோக்கிமெய்ஞ்ஞானிகண் உற்றிடல்மருந்தென்றுரைத்ததைத்தது. *

(பொருள்)

ஒருமாதவன் மற்றிவன் வேதனைகண்டு - மேலாயதவத்தினையுடைய ஓர் முனிவர் பிதாவெடுத்துவருகிற புத்திரன் றுக்கத்தைநோக்கி (வர்ரீர் வேதியரே) ஒழிவற்றுளவொன்றையுளத்துணரும் - யாவுமொழிந்தவிடத்துள்ள விரண்டற்றபரமத்தை அறிவென்றற்று - பரமாகிய

ஞானிகள்கண்ணுறாரே- பரமேசாருகின்றஞா
னிகளினது கிருபாநோக்கம் இவ்விமீதாம்பா
ருந்துநிலே-பரமௌஷிதமென்றுபகர்ந்தன
ன்-அரியமருந்தென்றுசொற்றனர் எ-று.(௰௧)

இந்தபாதவமோ அந்தப்பரஞானிவாசகஞ்செ
ய்தருளிய ஸ்தானமும் அவரது திருநாமமு
மேலருளிச் செய்கின்றார். - - *

தானந்தமிலாததனைத்தருவான் - *
சத்திச்சரமென்றுபீடந்தனில்வாழ் *
மானந்திபராயணனென்பவனோர் *
மைந்தற்குறுநோய்க்குமருந்தெனவே. *

(கருத்து.)

சந்தஞ்சத்திச்சரத்தின்வாழ்தற்பரன் *
நந்திபராயணர்மருந்தெனநவின்றது. *

(பொருள்.)

சத்திச்சரமென்றுபீடந்தனில்வாழ்- சத்தி
ச்சரமென்னும் பெயரினையுடைய தலத்தில் வீ
ற்றிருக்கின்ற-தானந்தமிலாததனைத்த
ருவான்- தனக்கோர்முடிவில்லாத பொருளைக்
கொடுப்பவனாகிய - மானந்திபராயணனெ
ன்பவன்-மகிமையிருந்த நந்திபராயணனென்
னுந்திருநாமத்தையுடையவர் - ஓர்மைந்தற்

குறுநோய்க்கு மருந்தெனவே-உன்புத்திரனை
ட்பொருந்தியநோய்க்கு மருந்தென்று சொல்
லியருளினானென்றவாறு. (௰௨)

அந்த மாதவர் மொழியைக் குருமொழியா
கக்கொண்ட இந்தவேதியராகிய சாந்தசீலன்
செய்கையை மொருளிச்செய்கின்றார். *

முடியாவுபதேசமிதென்றவனு - *
முனிவன்பதமெய்திமொழிந்தனனிக் *
கொடியான்வெருவாதுதுயிற்றியநோய் *
கூறற்கரிதாயகொடுந்தொழிலே. *

(கருத்து.)

அவ்வுரைபெற்றவ்வருண்முனிபதமடைந் *
திவ்வினைபவ்வினையியம்பரிதென்றது. *

(பொருள்)

முடிப்பாவுபதேசமிதென்றவனும் - நீங்கப்பெ
ற்றவுபதேசமாகும் இம்மாதவனுரையென்று
அந்தவேதியனான சாந்தசீலன் - முனிவன்பத
மெய்தி - நந்திபராயணஸ்வாமியிருக்குந்தா
னத்தையடைந்து அவர சந்நிதியில். சகிவர்
ணனை நிறுத்தித் தான்வந்தனஞ்செய்து - இக்
கொடியான் வெருவாதுதுயிற்றியநோய் - ஸ்வ
வாமி பொல்லாங்கினையுடையவன் முற்பவ

த்தில் பயமற்றுச்செய்துகொண்டுவந்த துன்
பத்தை - கூறற்கரிதாயநெடுந்தொழிலென
மொழிந்தான் - சொல்லுதற்கரிதாய வொல்லா
த செய்கையென்று விண்ணப்பஞ் செய்தனர்
என்றவாறு. (௰௩)

இதற்குதாரணம் - உபதேசவிளக்கம்.

உன்னருங்கொடியோரினுயர்ந்தவன் *
றன்னியற்கைதனையித்தராதலத் *
தின்னவாறென்றியாவர்க்குமாதவ - *
முன்னரன்பின்மொழிதிடமில்லையால். *

என்பதனாற்காண்க.

பின்னருஞ்சாந்தலிங்கன் விண்ணப்பஞ்செய்
கின்றதைமேலருளிச்செய்கின்றார். *

ஈங்குன்றிருமுன்பகரும்படியோ - *
விவ்வெய்யதீவினையென்னவொம் *
நீங்கும்படி தன்னனுபூதியினால் - *
நிகழும்விழிவைத்தனனின்மலனே. *

(கருத்து)

பின்னவன்வினையிவன்பசரித்தனமுனி *
தன்விழியால்வினைதகர்த்தருளாற்கரு. *

(பொருள்.)

இவனெய்தியதீங்குன் திருமுன்பகரும் ப
டியோவென்ன - அடியேன் புகுந்திருக்கிய இவ

ணடைந்திருக்கின்ற பாவத்தைத் தேவரீர் சந்
நிதிமுன்பாக விண்ணப்பஞ்செய்யத்தக்கதன்
றென்றுவிண்ணப்பஞ்செய்ய- நின்மலன்றன்
னனுபூதியினு ளிகழும்விழிவினையெல்லாந் தீ
ங்கும்படிவைத்தனன் - மாநகிதராகிய நந்திப
ராபூணஸ்வாமிகள் தமதுஸ்வாநுபூதியிலேவி
ளங்குகின்ற கிருபாநோக்கத்தினாலே சசிவர்ண
ன்பாவங்களெல்லாம்நீங்கும்படிமத்தகாதிபா
தாந்தம்பார்த்தருளினார்.எ-று- (௰௪)

திருக்கண்வைத்தமாத்திரத்தில் அவனடை
ந்தபெருமையைமேலருளிச்செய்கின்றார். *

கனியாதபவக்கடுவானதிருக் - *
கண்வைத்தலும்விட்டவகாதுகடும் *
பிணியாவையுநல்லபிதாவின்றநாள் - *
பேணிப்பணியென்றபெயர்த்தனனே. *

(கருத்து)

பாதகமெலாமுனிபார்வையிலேகவுந் *
தாதைதிருவடிதாழ்ந்திதொன்றகன்றது. *

(பொருள்.)

திருக்கண்வைத்தலுங் கனியாதபவக்கடுவா
னகடும்பிணியாவையு மனுகாதவிட்ட-நந்தி
பராபணஸ்வாமிகள் தமதுகிருபாநேத்திரத்

தை சசிவர்ணன்பேரில்லைக்கவும் பிரவ்க
டோறுங்கட்டுப்பட்டு அளவுபடாதிருந்தருஞ்
சிறுங்கொடியவினைகள்யாவும் இவனைநெருங்
காதுபோய்விட்டது- நல்லவிலைநதான்பேணி
ப்பணியென்றுபெற்றனன்பிரா - நன்மை
மிகுந்த குருஸ்வாமிகளது திருவடியில் உண்
மைபொருந்தப்பணிவிடைசெய்துகொண்டி
ருநீயென்றுரைத்துப்போயினர்பிராவென்ற
வாறு. (௰௫)

பிராவசன்றபின் சசிவர்ணன் குருவுக்குப்
பணிவிடைசெய்கின்றதை மோருளிச்செய் கி
ன்றார். *

இடனைமுதலாகவுவர்திலறயான் *
ஏவும்பணிசெய்திவனுஞ்சிரநாள் - *
உடனையவனைத்திருமேனிதனக் - *
குரியானைவற்றை ஓம்ப (நா(ட. *

(கருத்து)

குருமுன்பணியெலாமிவன்புரிந்திருந்தவிழி *
காவல்செய்யிடைமெய்யைக்காத்தனனென்றது.

(பொருள்.)

இடனைமுதலாகவினைநடோனைமெம்பணியி
லனுநந்துசெய்து-ஆசாரியார் ஆரைமுதலி

பணிவிடைகளிலேயினும் அப்பணிவிடையைசசி வர்ணனானவன் அடியேற்குக் கிடைத்ததே யென்ற மனமகிழ்ச்சியுடன் செய்து இவனுந்தி லதாரூடனேயத்திருமேனிதனக்குரியானென வுற்றனனும்பிராமேட- சசிவர்ணனுஞ்சிலகால ம் ஆசாரியனைப்பிரியாமல் அவரதுதிருமேனி க்காயவனாக இருந்தனன் ஆசாரியரிடத்து. எ ன்றவாறு. (௰௯)

(மாணாக்கன்பக்குவத்திற்கு-உதாரணம்.)

ஒழிவிலொடுக்கம்.

(வெண்பா.)

உடற்குயிர்போற்கட்கிமைபோலாசிரியனெந்நா ....ம்
விடம்புலித்திபாம்பினில்வீழ்வார்ககாந்த ....ம்
சுடர்ச்சமதனம்-வாழைக்ககககாலேதிமட்கலத்தைக்கைகா
டேழைக்ககாகாதேயிது.........................[வர

என்பதனாற்காண்க.

மேற் ஆசாரியர்குப்பணிவிடைசெய்த பு ண்ணியத்தினாலே சிவஞானத்துக்குண்டாகிய பரிபா கத்தையருளிச்செய்கின்றார். - ❋

நன்றாய்முனிதான்வழிபாடதனால் - ❋
நானாவிதமானபிறப்பினைவிட் - ❋
டொன்றாகியவீடுணருத்தமர்கட் - ❋
குளசாதனதான்குழூதித்தனவே. ௨ ❋

(விருத்தம்)

நாதனாற்பணிப்பனாற்குருத்திசாக்ஷாற்றுணர் *
சாதனசதுட்டயஞ்சார்ந்ததுலாத்தது - *

(பொருள்.)

முனிதானென்றாய் வழிபாட்டதனால்- ஆசாரியர் திருவடிகளில் மாறாக்காதலிய சிவஞானன் உண்மையாகப்பணிவிடை செய்துவருகின்ற புண்ணியபலத்தினாலேபெரிதாகவிருந்து-நானாவிதமானபிறப்பினைவிட்டு-பலபலவிதமாகவருகின்றசநநமரணங்களொழிந்து- ஒன்றுமிலாதிருந்தமர்கட்- குளசாதனநான் குமுழித்தனவே - பரசாயுச்சியவீட்டினைப்பெறக்கருதும் அதிதீவிரதரபரிபாகருக்குண்டாகின்றசாதனசதுட்டயத்தின் அருத்தம் இவனுக்குத் தோன்றியது-என்றவாறு; (என)

நானாவிதமானபிறப்பாவது - நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு - எண்பத்துநாலு இலக்கம் சீவராசிகள்- அவையாவன - பை-முட்டை-நிலம்-வியர்வை - இவைநால்வகைத்தோற்றம்-தேவர்-மக்கள்-விலங்கு-புள்- ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம் - இவைஎழுவகைப்பிறப்பாம் தேவர்-பதினாலுலக்ஷம் - மக்கள் ஒன்பதுலக்ஷம்-விலங்கு பத்துலக்ஷம்-புள்பத்

றுலக்ஷம்-ஊர்வன பதினொருலக்ஷம்- நீர்வாழ்வன பத்துலக்ஷம் - தாபரம் இருபதுலக்ஷம்- ஆக-௮௰௪-லக்ஷம் ஜீவராசிகளாம்—சாதனசதுஷ்டயமாவது. நித்யாநித்யவஸ்துவிவேகம் இகாமுத்ரார்த்தபலபோகவிராகம்-சமாதிஷட்கசம்பத்தி-முமுக்ஷுத்வம்- அவையாவன- நித்தியமாவது-பிரமம்-அநித்தியமாவது தேகாதி-ப்ரவஞ்சமென்பது நித்தியாநித்தியவஸ்துவிவேகம் இகபோகபரபோகங்களில் வெறுப்பாகிய நிராசையென்பது இகாமுத்ரார்த்தபலபோகவிராகம்-சம-தம - உபரதி- திதிக்ஷா-ஸமாதான - ச்ரத்தை- என்பனவாறும் - சமாதி ஷட்கஸம்பத்தி - மோக்ஷத்தி லிச்சையிருந்துண்டாவது முமுக்ஷுத்வம் - இதன்விரிவுகளை குருவினாலும் சுருதிகளாலும் அறிக

இதற்குதாரணம். கைவல்யநவநீதம்.

நித்தியவநித்தியங்க - - - *
ளின்னதென்றெரிவிவேகம் - *
மத்தியவிடயங்கள் - - - *
வருபோகங்களினிராசை - - *
சத்தியமுணாக்கவேண்டுஞ் - - *
சமாதியென்றாறுகூட்டம் = *

முத்தியைவிரும்புமிச்சை - - *
மொழிவர்சாதனமிந்நான்கே. - - *

என்பதனாற்காண்க.

மற்றுஞ்சசிவர்ணன்றன தகுறையை ஆசாரியர்சந்நிதியில் விண்ணப்பஞ்செய்யும்பொருட்டுவணங்கியது மேலருளிச்செய்கின்றார்.

முனிவன்றிருமுன்புளதன்குறைதான் *
மொழிவன்சிலவஞ்சலிகுஞ்சியதாய் - *
பனிவந்திருகண்கள்ட்தங்களிலே - *
பலகால்வலம்வந்துபணிந்தனனே. - *

(கருத்து)

அன்புடன்குரவனடிதொழுதேத்தியே - *
தன்குறைபுகல்வான்சார்ந்தனனென்றது. *

(பொருள்.)

முனிவன் றிருமுன்பு—தேசிகரது அழகிய சந்நிதியில். தன்குறையுளதை—தனது குறையுண்டானதை. தான்சிலமொழிவான்-சிலவிண்ணப்பஞ் செய்யும்பொருட்டு. அஞ்சலிகுஞ்சியதாய்—சிரசிலெடுத்த அஞ்சலி அத்தனாக. பனிவந்திருகண்களின்—இரண்டு கண்களினும் ஆனந்தநீர்ராட. பலகால் வலம்வந்து—பலத

ரம்வலப்ரதெக்ஷணமாகவந்து. பதங்களிற்பணிந்தனன்—இரண்டு திருவடிகளில் வணங்கினான். என்றவாறு. தான்சாரியை. (௰அ)

மற்றும் ஆசாரியர்வினவசீடன்குறிப்பினையறிவித்ததை மேலருளிச்செய்கின்றார்.

அருளேவடிவாகியமாமுனிதான் *
அறியாதவர்போல்வழங்குறும் - *
பொருளேதெனமைந்தனடுங்கினனிப் - *
பொல்லாதபவப்புணரிக்கெனவே. - *

(விருத்தம்)

அருட்குருவறியார்போலவினவலும் - *
திருப்பதம்வணங்கிச்சீடனுரைத்தது. - *

(பொருள்.)

அருளே வடிவாகிய மாமுனி—கிருபையையே திருமேனியாகக் கொண்டருளிய நந்திபராயணஸ்வாமிகள். தானறியாதவர்போல வழங்குறும்பொருளேதென—சகலமுந்தாமறிந்திருந்தும் அறியாதவரைப்போல நீதுன்ப முற்று இரங்குகின்ற அர்த்தமேதென்ன. மைந்தன் பொல்லாத பவப்புணரிக்கு நடுங்கினனென்ன—சற்புத்திரனாகியசிவஞானன் துன்பமாகிய பிறவிக்கடலைக் கடப்ப தெப்படியெ

ன்று நடுங்குகின்றே னென்று சொல்லவே (௰௩)
என்றவாறு.

பிறப்பிற்கஞ்சியதற்குதாரணம்
(திருவாசகம்.)

வாழ்த்துவதும்வானவர்க - - *
டாம்வாழ்வான்மனநின்பாற் - *
றாழ்த்துவதுந்தாமுயர்ந்து - - *
தம்மையெல்லாந்தொழவேண்டி - *
சூழ்த்துமதுகரமுரலுந் - - *
தாரோயைநாயடியேன் - - *
பாழ்த்தபிறப்பறுத்திடுவான் - *
யானுமுன்னைப்பரவுவனே. - *

என்பதனாற்காண்க

மற்றும்ஆசாரியர்சீஷனுக்குப்பிறவிக்கடலின்
பெருமையை திருவாய் மலருகின்றதை
மேலருளிச் செய்கின்றார்.

வெருவும்பிறவிக்கடல்வித்தரமுன் - *
வேதாகமகீதைவிளம்புமதை - *
குருவுந்தன தன்பன்மனத்தளவிற் - *
கொளுமாறுதொகுத்திவைகூறினனே. *

(கருத்து)

பவக்கடலனைக்குப்பயந்திடுசீடன் - *
உவப்பமேதார்த்தமுனக்குறுமென்றது. *

(பொருள்.)

குருவும் - ஆசாரியராகிய நந்திபராயணஸ்வாமிகளும் - தனதன்பன் வெருவும்வித்தரப் பிறவிக்கடல் - தமதிடத்தில் அன்பினையுடைய சிஷ்யனாகிய சசிவர்ணனானவன் - விஸ்தாரமாகிய சநநசாகரத்திற்கு பயங்கரத்தை யடைகின்றனனென்று - மனத்தளவிற்கொளுமாறு அவன் மனமெவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு பொருந்தும்படிக்கி - முன் வேதாகமகீதைவிளம்புமதை - ஆதியிலுண்டாகிய வேதங்கள் ஆகமங்கள் கீதைகள் - கூறிய அருத்தங்களையெல்லாம் - தொகுத்திவைகூறினன் - ஒன்றாகத்திரட்டி யிவைகளைச் சொல்லுகின்றார். (உ௰)
என்றவாறு.

கீதையென்றது, சிவகீதை - பகவற்கீதை யெனவறிக. வித்தாரமென்பது, வித்தரமென்றுவிகாரமாயிற்று.

சநநசாகரத்தி னியல்பை
மேலருளிச்செய்கின்றார்.

மரணபவங்களானபுனலையுடையது - மிகையைவிழுங்குகாமவரவுபெரியது - கரணவொருங்கருந விடையவினைறுகர் - கணமொடிய ங்குமீனமிதவுமுகள்வதே.

(கருத்து.)

பிறப்புமிறப்பும்பெருகியபுனலிற் *
சிறப்புளவிடையமேசெந்தென்றுரைத்தது. *

(பொருள்.)

மரணபயங்களான புனலையுடையது-இறப்புப்பிறப்பாகிய நீரையுடைத்தாயிருக்கின்றது மதியைவிழுங்குங் காமவரவு பெரியது-அறியாகிய சந்திரனை இராபாகவிழுங்கும் ஆசையாகின்ற சர்ப்பங்களை மிகவுமுடையது.—கரணவொழுங்குறுத விடைய விலாநுகர்கணமொடியங்குமீனை மிகவுமுள்ளதே-விடையமாகிய வாராங்களைப் பொசித்துக்கொண்டு கரணமாகிய மீன்கூட்டங்கள் ஒழுங்காக மிகவும் புரளவிருக்கின்றது. எ-று. (உக)

(இருவமது.)

பெருமிதமென்றுகூறுபெருமையுடையது *
பிணிகளெனுங்கெடாதபுலவகமழ்வது *
வருமிடரின்பமானதிரைகள்பொருவது *
மனமெனும்வஞ்சராஜமாகரமுறைவதே. *

(கருத்து)

துன்பின்பலநோய்சொல்புலால்வஞ்சமீன் *
இன்பம்பெருக்குறுமிப்பவமென்றது. *

(பொருள்)

பெருமிதமென்றுகூறும்பெருமையுடையதும் களிப்பென்று சொல்லும் பெருக்கையுடையது. பிணிகளெனுங்கெடாத புலவுகமழ்வது கெடாதபிணிகளாலுண்டாகிய புலால்நாற்றத்தையுடையது. வருமிடரின்பமான நோய்கள் பொருவது - வந்துகொண்டேயிருக்குமின்ப துன்பமான அலைகள் மோதவிருக்கின்றது மனமெனும் வஞ்சராஜமகரமுறைவதே-மனமென்றுசொல்லும் வஞ்சனைக்குரிய திமிங்கில மாகிய இராஜமீனுறையத்தக்கது. என்றவாறு. (உஉ)

(இதுவுமது.)

அளவில்கந்தைபாமையபரிமிதமுள - *
அறிவில்நிறைந்தவாழமறியவரியது - *
களவுநெருங்கியுருமலவனுடையது - *
கலகவிடங்கம்மெவுகிரிமிநெளிவதே. - *

(கருத்து)

அகமானமையாழமறிவின்மைமெனுண்டு - *
புகுகளவுகலகம்புழுவென்றுரைத்தது. - *

(பொருள்.)

அளவிலகந்தபாமையபரிமிதமுள— அளவுக்

கடங்காத அங்கார மென்னும் அநேகம் ஆ
மைகளையுடையது. அறிவினிறைந்தவாழமறி
யவரியது — நிறைந்தஅறிவின்மையினது ஆழ
மறியவரியதாயிருக்கின்றது. களவுநெருங்கி
யூருமலவனுடையது- அடர்ந்து விஸ்தாரமா
ய்த்தவழ்கின்ற காவாகிய நண்டுகளையுடையது
கலகவிடங்கமெவுகிரிமிநெளிவதே - பொருந்
தியகலகஞ்செய்யத்தக்க ஆண்மையாகியபுழு
க்கள்நெளியத்தக்கது. எ-று. (உ௬)

இதுவுமது.

துகளெனுநன்கிலாத நுரைகடருவது - *
துறவலிலின்பமாணகரையையகழ்வது - *
மகளிரெனுந்தவாதவலியசுழியது - *
மறலிபுமஞ்சுகோபவடவையெரிவதே. - *

(கருத்து)

நன்கிலாநுரைபெண்ணாசைச்சுழற்கரை - *
மங்கியகோபவடவையுண்டென்றது. - *

(பொருள்.)

துகளெனுநன்கிலாத நுரைகடருவது— அணுவளவும் நன்மையில்லாத பொல்லாங்குகளாகிய நுரைகளாகத்தருவது. துறவலிலின்பமான கரையையகழ்வது — உணவாசையினால் மோக்ஷத்தைத் தரத்தக்க பேரின்பமான

சனையையழிக்கப்பட்டது. மகளிரொனுந்தவா
நவவியகுழிய து-பெண்ணாசையென்னுங் கெ
டாதவிபகுழியினையுடையது — மறவியுமந்
தகோடவடவைவெரிவதே—இயமனும்பயப்
படும்படியான கோடமாகின்ற வடவாக்கினி
யெரியவிருக்கின்றது- எ-று. - (௨௪)

(இதுவுமது.)

வெருவருகின்றபோகமுதலையுடையது - *
விவிதமனர்த்தமான துறையுமுடையது *
ஒருவர்கடந்துபோகவரியதெழுபவ - *
வத்தியிளம்பயாவருமகிலதிருமோ. - *

(கருத்து.)

போகமாமுதலையும்புகல்பமுமனைத்துற *
யாகியபவக்கடலிக்கரிதென்றது. - *

(பொருள்.)

வெருவருகின்றபோகமுதலையுடையது—
அச்சம்வரச்செய்கின்றவிடயமுதலையை
யுடையது-விவிதமனர்த்தமான துறையுமுடை
யது—பலவிதமான துறைகளையுடைய
து- ஒருவர்கடந்துபோகவரியது— எவர்களா
லுங்கடந்துகரையேறற்கரிதாயிருக்கின்றது- ஐ

ரூபவவுததி — எழுவகையாகின்றசதுரசாகரமானது-விளம்பயாவருகிலறிஞரோ.— அந்தசதுரசாகரத்தின் அளவினையறிந்து சொல்லத்தக்க அறிஞர்கள் இவ்வுலகத்தில் யாவரிருக்கின்றார்கள். எ-று. (உரு)

மரணபவங்களென்ற செய்யுட்டொடக்கி வெருவருகின்றவென்ற இச்செய்யுளீருக ஐந்துசெய்யுளாலும் பிறவிக்கடலின் பெருமையையுரைத்தார். *

இவ்வகைப்பட்ட பிறவிக்கடலை அறிவுடையோர்கடந்துவிடுமென்று அநுக்கிரகித்ததை மேலருளிச்செய்கின்றார். *

பொறிவழிசென்றயர்ந்துமேவலமதிகொடு *
பொருசமடங்களாறுமுதிபவெறுமதி *
அறிவழிவொன்றலாதபொருளிசொலவுள *
அனுபவவங்கமேறுமறிஞரலவோ. *

(கருத்து)

அறிவெனுங்கலத்திலேறோகணித்தால் *
பிறவிவேராறுத்திடும்மிதையிலதென்றது. *

(பொருள்.)

பொறிவழிசென்றயர்ந்து மேவல்மதிகொடு— சிரோத்திராதிஞானப்பொறியின் மார்க்கமாக

ச்சிசம்பிரதாயம் வருகின்றதுமாகி வருத்தப் படுத்தி வைக்கொண்டு - பொருசமையங்களாலும் பயிலுமதி — தர்க்கரீதிசெய்யுஞ் சமயங்களாதியுமை விதியாய்பிரகிருதியும்மனாதைத்தியப் ... யும் — ஞானந்திரல் - அழிவொன்றில்லாத பொருளிதென் — அனித்தியமெனப்பதிலா ... னாகிய பொருளிதென்றின்றதிசையம் - உலகிலுளவங்கமேறு மதிருநயம் ... — உண்டாகின்ற அனுபோகமென்னும் பயமின்றம அறிவுடையோர்பிறவிக்கடலிக்கடப்பார். எ-று, - (உ௮)

முத்திபயிலுமத்தென்றமையாற்றிருப்பிலென்பதாவருவிக்கப்பட்டது. - *

தற்சமயம்-ஆறவை-உலகாயிதம்-பௌத்தம்-சமணம்-மீமாம்சை-பாஞ்சராத்ரம்-பாட்டாசாரியம-எனவறிக. - *

பிறவிக்கடற்கடப்பதற்குதாரணம்.

(திருவள்ளுவநாயனார்குறள்.)

பிறவிப்பெருங்கடனீந்துவர்நீந்தார் - *
இறைவனடிசேராதவர். என்றும். *

(அறுபலசாரவெண்பா.)

அறிமரக்கலத்திலேறிக்கடத்தல் *

பிறவிக்கடலைப்பிரிந்துத்-துறையாம் ❋
பிறவாவழிக்குரியபேரின்பவீட்டில் - ❋
உறவாகவைக்குமுகந்து. - ❋

என்பதனாற்கூறினார்.

இத்தன்மையையுடையபிறவிக்கடலைக்கடப்பதெப்படியென்ற பயந்தசீடனைநோக்கிக் குரு அனுக்கிரகித்ததை மேலருளிச் செய்கின்றார். - - - ❋

புணரிகடந்துபோகவிரகிலனெனமொழி........௦
பொழுதுபலம்பியாவிபுதல்வனியமனர்.........௦
உணர்வெனுங்கந்தமேறிலிருவல்லையையென்......௦
றுணையவழங்கினாதுவகையருளே..........௦

(கருத்து)

உயிர்நாமன்பவக்கடப்பிற்றேவென்பவன் ❋
மேலுற்றவழியிற்றுல்மாற்றாமன்றது. ❋

(பொருள்.)

புணர்விலம்புலம்பொலிபிறமுனம் — சசிவ ர்ணோ சற்புத்திரன் றாய் பமூற்று எனதா ளிப்பிரிவதற்குமுன்னமே - புணரிகடந்துபோ கவிரகிலனெனமொழிபொழுது — ஜநநசாக ரத்தைக் கடந்துபோகவெனக்கு உபாயந்தெ ரிடப்பலவிலையென்று விண்ணப்பஞ்செய்யும்

காலத்தில்-நாதன் — குருநாதனாகிய நந்திபரா
டனைசுவாமிகள்சசிவர்ணனைநோக்கி- அறிஞரு
ளார்மெய்யுணர்வுகொடுமேதில் — அறிவையுடையவ
னே பேரறிவென்னுங்கப்பலிலேறினால்- ஈக
லையென்னுஞானத்தைவழங்கி புகழையருளிவே
பிறவிக்கடலைக்கடந்துவிடுவாயென்றுதிருவா
ய்மலர்ந்தருளிச்சந்தோஷமுண்டாகவருளியமா
த்திரத்தில். எ-று. - (உஎ)

மேல் ஆசாரியன்திருவடியைவாழ்த்தி மாணாக்கன்வினவியதையருளிச்செய்கின்றார்.

[வேறு.]

வாழியெனவிறைவனடிதொழுதவருபமாம்
ஆழியினையகலுமதியருளேதெனவுமென. *

(இதன்கருத்து)

ஐயனடிதொழுதுருப்பவங்கடந்திடயான் *
உய்யவறிவினைபுகலென்றுரைத்தது. - *

அவன் — அந்தச்சசிவர்ணன். வாழியெனவிறைவனடிதொழுது — நீர்வாழ்கவென்று ஆசாரியர் திருவடியில் வணங்கிநின்று. உரு பயமாமாழியினையகலும் — பயந்தரத்தக்கதாயிருக்கின்ற பிறவியென்னும் பெரியகட

வினைநீங்கும். அறியாருளெ — பேரறிவைக் கொடுத்தருளியவன் நின்மையனேயென்று வினைப்படுஞ்செய்ப. எ-று (உஅ)

வணக்கியமாணுக்கு ஆசாரியர் உணர்வின்
விபரம்பற்றித் தமதுமேலருளிச்
செய்கின்றார்.

பரவறிவு அபரவறிவெனவிருபரிசாந் - *
திரவறிவையறியுமவர் மொழியர் தெளிவுறவே.

(கருத்து)

உபரறிவு பெற்றிவ்வுலகினை மறந்தோர் - *
மேலுறவுமோ பரறிவில்லையென்றது. - *

(பொருள்)

பரவறிவு அபரவறிவெனவிருபரிசாம் — பரவறிவென்றும் அபரவறிவென்றும் இரண்டு விதமாகும். அவையில் பரவறிவாவது பரத்தைப் பற்றிய பேரறிவு. அபரவறிவாவது — உலகத்தைப் பற்றிய சிற்றறிவு. இவையில் - திரவறிவை யறியுமவர்மொழியர் தெளிவுறவே — நிலையுற்ற பேரறிவாகிய பிரமத்தைத் தம்பரறிவுடையரானவர்கள் அதினிற் பொருந்தித் தெளியாத உபதேசஞ்செய்வார்கள். எ-று. (உகூ)

(உதாரணம் திருப்புகழ்)

அறிவையறிவது பொருளெனவருளிய பெருமாளே யென்பதும் இக்கருத்தைப் பற்றி யெழுந்தது.

மேலைவாசிகை - இதுவுமது.

அபரவுணர்வருமறைகள் முதலகிலகலையும் *
உபரமமைந்தபறவுதவுவதுபரவுணர்வே. *

(கருத்து)

கலைகளைச் சிற்றறிவுகாட்டுவதின்ப — *
நிலையினைப்பேரறிவுதேசிக்குமென்றது. *

(பொருள்.)

அபரவுணர்வருமறைகள் முதலகிலகலையும் (உதவுவது) அரிடவேசாகமசாவதிர புராண கலைஞானங்களையெல்லாமறிந்து அதிலிறுமாந்திருந்துகொண்டிருக்கச்செய்வது அபரவுணர்வாகியசிற்றறிவு. பரவுணர்வுமமைந்தபற வுபர முதவுவது—சீவவறிவைப்பற்றிய அகங்காரத்தைநீக்கிப்பரத்தோடொன்றுமோக்ஷத்தைத்தரத்தக்கதுபரவுணர்வாகியபேரறிவு. எ-று

(௫௰)

உபரமென்றது ஒடுக்கம் - உதவுவதென்றதைப்பிரவிருத்திக்குங் கூட்டுக,

சிற்றறிவினியல்பிதுவென்று மேலருளிச் செய்கின்றார்.

புராணமிதிகாசமவை யின்பொருளனைத்து
பிராணனறிபாதுளவிடத்திலைவயிற்றே. [ம்

(கருத்து)

புராணமுதற்சொல்லும்பொருளெலாமுன்னுக o
துராதனைப்பேசுந்தன்மையென்றுரைத்தது. o

(பொருள்)

புராணமிதிகாசமவை யின்பொருளனைத் தும்—பதினெண்புராணங்கள் இதிகாசங்கள் முதலானவைகள் சொல்கின்றவர்த்தங்களெல் லாம். பிராணனறிபாதுளவிடத்து — ஆத்மா வையறிபாதவிடத்திலுண்டாகிப்பேச்சாம்- இ வையிற்றே — ஆத்மாவை யறிந்தவர்களுக்கு வீண்பேச்சாகமுடியும். எ-று. - (௩௧)

(மேல் அதிகாரிகை- இதுவுமது.)

ஆகமவிதங்களறிவார்கள்பரமறியார் *
யோகமொடுறங்குமவரேபரமுணர்ந்தோர் *

(கருத்து)

கிரியைநீங்கிக்கிளர்ந்தறிவுடையினோர் *
பிரிட்டாப்பிரமமுணர்ந்தவரென்றது. *

(பொருள்.)

ஆகமவிதங்களறிவார்கள் பரமறியார்— ஆகமங்கள் சொல்லுகின்ற பலவிதங்களான மந்திரகலை தந்திரகலைகளைக் கற்றறிவார்களையன்றி உயிருக்குயிராய்நிறைந்த பரத்தையறியாதவர்களாம்— போகமோ டிறங்குமவரோ பர புணர்ந்தோர்— போயநிட்டிறை செய்பவர்களோ பரத்தைபற்றிப் புணர்ந்தோர்கள். எ-று. ௬௨

ஆகமவிதங்களென்றமையால்- மந்திரகலை தந்திரகலை வருவிக்கப்பட்டது - கூட்டமாக கருவிகள்சேர்ந்திருக்கும் நனவில் கழிப்பிட்டிய து அறிதுயில் பெறுகின்றதை போகமோ டிறங்குமவரென்றார்.

(அவதாரிகை. இ-குவமது.)

இயலறிவ திசைபறிவ தினமறிவ துளவாம் *
அயலறிவ தறியதல வறிவறிவ தறிவே *

(கருத்து)

அன்னியமானதை யறிவதல்ல - *
மன்னியவறிவை யறிதறிவென்றது - *

(பொருள்.)

இயலறிவ திசைபறிவதினமறிவதுளவாம்— இயற்றமிழ்களை யறிவதும் - இராகப்பாடல்களை யறிவதும் - உண்டாகின்ற நாடகத்தமிழ்களை

இவைபோன்றவைகளையறிவதும்— அயலறிவ
தறிக தல வறிவறிவதறியே--அறிவிற்கன்னிய
மானவைகளையறிவதும் அறிவன்று - பரமா
கிய பேரறிவையறிகின்ற வறிவேயறிவு-எ-று.
(௫௫)

(இதற்குதாரணம் சந்நிதிமுறை.)

அறிவைவிடவேறல்லஅம்புவியுநெஞ்சுஞ் [வே
செறிவறிவாய்நில்லென்றுசெப்பிக் - குறியற
நெஞ்சைத்திருத்தி நிகழ்வைத்தபோநேரன் *
கஞ்சத் திருத்தண்டைக்கால் - என்பதனுற்கா
[ண்க.

(அவதாரிகை -இதுவுமது.)

நவிலுங்கலையறுபத்து நாலுமறிவாரும் *
புலவலையமறுத்த பரமஞ்ஞியாரோ - *

(கருத்து)

மறுவிலாக்கலையின் வழியறிவோரும் *
பிறவியறவொன்றைப்பெறவறியாரென்றது.

(பொருள்.)

நவிலுங்கலை யறுபத்து நாலுமறிவாரும்—
சொல்லுதற்குரிய கலைஞானங்கள் - அறுபத்
துநான்கையும் அறிகின்றவர்களும்—புலவலை
யமறுத்த பரமஞ்ஞியாரோ—சுதந்தரமாகிய கட

லைநீங்கி இரவுபகலற்றவிடமாகிய பரத்தையறியமாட்டார்கள்-எ-று. (௫௪)

சுத்தமென்றமையால் இரவுபகலற்ற
விடம் வருவிக்கப்பட்டது

புராணமிதிகாசமென்னுஞ் செய்யுண்முதலீ நவிலுங்கலையென்னுஞ் செய்யுளவாக்கும் நான்குசெய்யுளால் சிற்றறிவினியல்பை யருளிச்செய்து மேல்பேரறிவினியல்பையருளிச் செய்கின்றார்.

ஆகவறிவாளரறிவாரவையனைத்தும் *
ஏகவறிவாளரிவையாவுமறியார் - *

(எருத்து.)

உடல்நிலையென்றவருடலையேகாண்பர் *
இடவறிவரிவைகளைத்தெரியாரென்றது *

(பொருள்.)

ஆகவறிவாளரறிவாரவையனைத்தும்--உடலை நானென்னுஞ் சிற்றறிவுடையோரவைக்குரிய தனுகரண புவனபோகங்களாகி யானெனதென்னுங் காரியங்கள் யாவையுமறிவார்கள்—ஏகவறிவாளரிவை யாவுமறியார்—ஒன்றாய்நிறைந்த பேரறிவினையுடையோர்கள் பலபலவாய்விரிகின்ற சிற்றறிவிற்குரிய தேகாதியிப்பிரவஞ்சமுதல்யாவையுமறியமாட்டார்கள் எ-று. (௫௫)

(அவதாரிகை-இதுவமது.)

பூசனையுமத்தசல பொருளுமதநன்மையும் *
ஈசனையும்வேறதற வறிவதறிவெனவே *

(கருத்து.)

இரண்டறநிற்கின்றமெய்ப்பொருளானதும் இரண்டறபூசனைச்செயலுமதென்றது.

(பொருள்.)

தமையுமீசனையும் வேறதறவறிவதறிவு— தாமாகிய ஆத்மாவையுமீசனாகியபரமாத்மாவையும் வேறல்லவென்று அறிகின்ற அறிவேபேரறிவாம அப்படி அறிகின்றதுவே— பூசனையுமத்தசல பொருளுமது வெனவே சகலபூசனையும் அவ்வே—சம்பந்தமான வேதாகமசாஸ்த்திரங்களும் அவையாம்-எ-று. (ருக)

(இதற்குதாரணம்-அத்வானந்தபோதம்.)

எப்பொருட்கள் ஞானமன்னியிலங்கிமென்றுமீசன்
அப்படிவிளங்குகின்ற [illegible] கன்றனைக்கு
மெய்ப்படியைவேறோர்ப்பவிஜ்ஞர்க்ளுமெய்யே
இப்படிஞானத்தின்னுடைநூற்ப்பட்டவானிசம்
என்பதறுற்றார்கள்.

(அவதாரிகை-இதுவமது.)

ஐயறிவநிந்தவைபடங்கினார்களெனும் *
மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறுமோ *

(கருத்து.)

பொறிபுலனடக்கினும் பூரணவுணர்வின் *
நெறிபெறார்வீடுறா ரென்றறிவித்தது. *

(பொருள்.)

ஐயறிவுநிற்றலையடக்கினர்களெனும்—சத்தாதிவிஷயங்களைந்தையு மறிகின்ற ஸ்ரோத்ராதிஞானேந்திரியங்களைந்தின்பின் செல்லுகின்ற மனதினையு மடக்கினவர்களென்றாலும் மெய்யறிவிலாதவர்கள் வீடடுத்தபெறுமோ—உண்மையையறிகிற பேரறிவில்லாதவர்களாகில் பேரின்பவீட்டினைப்பெற்றுக்கொள்ளாதவர்கள்-என்றவாறு. (௬எ)

(இதற்குதாரணம்-அநுபவசாரம்-வெண்பா)

சட்டறிவுகெட்டிருக்குந் தூயவர்களானாலும்
நிட்டையிலேமெய்யறிவினோமுற்றல்-கட்டறுத்துத்
தம்பதமாய்நின்ற வானந்தபேரொளியின்
ஸம்பதத்தைப்பெறார்தான்

(அவதாரிகை-இதுவுமது.)

மெய்ம்மையறிவல்லதமிழ்வேறறிவதெல்லாம்
தம்மையறியும் மறிவேயறிவதாமே *

(கருத்து)

அன்னியமறியுமறிவன்றெனத் *
தன்னையறிவதேயறிவென்றுணர்த்தது *

(பொருள்.)

தமில்வேறறிவதெல்லா மெய்ம்மையறி வல்ல தனக்கன்னியமான வேறென்றை விசாரித் தறிவதெல்லாமெய்யறிவன்று — தம்மையறியு ம்மறிவதேயறிவுதானே — தன்னை விசாரித்தறி கின்றவறிவே அறிவு-எ-று. (௫அ)

(இதற்குதாரணம்-திருமந்திரம்.)

முன்னைப்பிறவியிற்செய்தமாதவம் *
பின்னைப்பிறவியிற்பெற்றாலறியலாம் *
தன்னையறிவதறிவாமஃதன்றிப் *
பின்னையறிவதுபேயறிவாமே. *

என்பதனாற்காண்க.

ஆகவறிவாளனொன்றுஞ்செய்புண்முதல்-மெய் ம்மையறிவன்றுஞ்செய்யுள்வரைக்குந்தான் குசெய்யுளால் பேரறிவினியல்பையருளிச்செ ய்து மேலாசிரியருக்குமாணாக்கன் விண்ணப் பஞ்செய்தலைத அருளிச்செய்கின்றார்.

தானெனுமுடம்பிதுதனைத்தவிரவேறு *
யானெனுமறந்தமுளாவாவருளுகெனவே *

(கருத்து.)

உடம்பினையன்றிவேறுமுன்றுண்டோவெனத்
திடமுறவலங்கிச் சிடன்வினாது *

(பொருள்.)

தானெனுமுடம்பிது தனைத்தவிரவேறு—தா

னென்றுசொல்லுமிந்த உடலினையன்றிவேறா
ய் - யானெனுமருத்தமுளளோவாவருளுமெனை
வேயானென்றுசொல்லுதற்குரியபொருளுநென்
டோ வருளிச்செய்யவேண்டுமென்றுசொல்ல
வே-எ-று. (௬கூ)

ஆசாரியர் சீடனைநோக்கி விடையருளிச்
செய்கின்றதைமேலருளிச்செய்கின்றார்.

(வேறு)

ஏனதாளைடபொன் பூமகன் றையல்பாய்மா ⁂
விடங்கண்முகங்கால்கையானென்னெதென்
தனதாயுளாப்யார்வ தத்தித்தவூனைத் [றும்
தானென்றயர்ந்துஞ்சொல்த்தக்கதன்றே ⁂

(கருத்து.)

மோகமாம்பஞ்சடமுழுவதுமன்றன்றித் ⁂
தேகநீயன்றெனத்தெளியவுரைத்தது ⁂

(பொருள்.)

ஏனதாளைடபொன் பூமகன்றையல்பாய்மா
வென்றும்—வஸ்திரம் ஸ்வர்ணம்-பூமி-புதல்
வன் - மனைவி - புரவி - யானை இவைகளையெ
ன்னதென்றும்—கண் முகங் கால் கையென்
னெதென்றும்—கண்களையு முகத்தையுங் கால்
களையுங் கைகளையும் மென்னதென்றும்- யா
னென்றும் இவ்வவயவங்களையுடைய உடலை

யானென்றும்—தனதாயுனைப்பார்—சுதந்தர
மாகச் சொல்லிக்கொள்வார்கள்—வகுத்திந்த
வுடலைத்தானென்றயர்ந்துஞ் சொல்லத்தக்கத
ன்றே—ஆடைமுதலிய பொருள்களையுங்-க
ண்முதலிய அவயவங்களையும் என்னதென்
றும்-பிரிவுபட்டிருக்கின்றவிந்தவுடலைத்
தானென்றுமறந்துஞ் சொல்லத்தக்கதன்றெ
ன்றவாறு:—அவயவம் என்னதென்று சொ
ன்னமையாற்-யானென்றதை உடலென்றுவரு
விக்கப்பட்டது-உடலைத்தானென்று சொல்ல
த்தக்கதன்றெனவே ஆடைமுதலியவற்றையுங்
கண்முதலியவற்றையும் என்னதென்றுசொல்
லத்தக்கதன்றென்பது வருவிக்கப்பட்டது.

(௪௰)

மேல்தேகேந்திரியம் அன்னியமென்ப
தை உபமானங்களாலறிவித்தலை
யருளிச்செய்கின்றார்.

தானோகவூராழித்தூலவென்னவினை - - *
தண்டாகவண்மாருபுதட்டாசமொட்டாம்
நாளான்மலர்ச்செஞ்சிகந்தற்றொழித்தர்
நாறுறுசுமுர்வானைவேறாகநாட்டே - - *

(௪௧)

தோணாநடத்தும்பாகனைப்போலுடல் *
உணாநடத்துமொருவனுண்டென்றறு *

(பொருள்.)

தானுராஜியாக—இரண்டு தங்களும் நடக்கின்ற சக்கரமாகவும்-விணுதண்டாக—நரம்புகளுமுதுகென்புந்தானாகவும்-அகன்மார்புதட்டாக—விசாலமாகியமார்பு விமானதாரப் பலகையாகவும் - சென்னிமொட்டாக— தலை சிகரமாகவும்- கூந்தற்கொடியாக—மயிர்கள் துவசமாகவும் ஆகிய - தனுத்தேரென்ன— இந்தத்தேகத்தைத் தேரைப்போல - நாளான் மலர்நாணுநம் — இரவியினுல் பிரகாசிக்கின்ற நாள்களுள்ளளவைக்கும - உயிர்வாணியே றுகநாடே—சாரதியாக நடத்துகின்ற தேவியை தேகத்திற்கு அந்நியமாக நினைப்பாயி-று. (௬௧)

தேகத்தைத்தேரென்றுந் தேகியைச்சாரதியென்றுமுரைத்ததற்குதாரணம்.

(ஆனந்தபோதம்.)

முதலனையர்வையம் போப்வரவுறநடாத்தும் ௧
குதருங்கொருவனிந்த வுடலெனத்தொகுத்த வையம் ௨
மேருனியுறநடாத்து மேலவனொருவனுண்டால் ௩
ஆதலொளியும்போலவறிந்தனுபவித்திடாயே ௪

என்பதனாற்காண்க.

(மேலவதாரிகை- இதுவுமது.)

கடத்துஞ்சரப்பண்ணியுண்ணின் றெருத்தன்
கைபாதகன்னங்கள் மெய்பாலியக்கும்*

(அ)

கிடக்கும்நடத்தாவிடத்திவ்வுடம்பும் ❋
கிடக்குமொருத்தன் னடத்தாவிடத்தே ❋

கருத்து.

மரக்கரிக்குள்ளொருமானுடனிருந்து ❋
துரத்தினிலாட்டுந் தன்மையென்றுணர்த்தது.

(பொருள்.)

கடக்குஞ்சரம்பண்ணி—மதம்பொழியாநின்ற யானையைப்போல மரத்தாலேயொருருவஞ்செய்து-உண்ணின் றொருத்தன்—அதற்குள்ளாகவேவார்பு நடனின்று நடத்தினால்-கைபாதங்களங்கள் மெய்போலியக்கும்—துதிக்கை-கால்கள் - காதுகள் - ஆசையமெய்யானையைப்போலநடக்கும் - கிடக்கும் நடத்தாவிடத்து—உண்ணின்றவன் நடத்தாதபோது கிடக்கும் அவைபோல - இவ்வுடம்புங்கிடக்குமொருத்த னடத்தாவிடத்தே—இந்த தேகமும் தேகிநடத்தாதபோது பிரேதமாய் கிடக்கும் எ-று. (௬௨)

(உதாரணம்-ஆத்மபோதம்.)

மரக்கைமாவிக்குள்ளோர் மைந்தனுள் காட்டல் ○
உருக்கியதுவாட்டுஞ் செய்கைபோல்—நீக்குமுடல் ○
ஆட்டுவோனாட்டிடுதல் ரோமைதுட்டாக்கால் ○
காட்டம்போலாகுமிதுகாண். ○

என்பதனுங்காண்க.

மேயல் அன்னமயமாகிய தேகம்நீயன்று

ன்பதை யருளிச்செய்கின்றார்.

ஒருகூறுநீராகு மொருகூறுமலமாம் *
ஒருகூறுடம்பாகு முண்டற்றவன்னம் *
இருகூறுந்நீயாகி லொருகூறுந்நீயாம் *
இழிக்கும்மலஞ்சோறிடப்பட்டவுடலே *

(கருத்து.)

மலமூத்திரன்ன மாறுவவ்வையைத்திடு *
கலமெனுமுடலநீயன்றென்றுரைத்தது *

(பொருள்.)

உண்டற்றவன்னம்— நீபுசித்து சாடராக்கினியிலே பின்னப்பட்ட அன்னமென்றுபாகமாம் அதில் ஒருகூறுநீராகும்-ஒருகூறுஜலமாகும்-ஒருகூறுமலமாம்-ஒருபாகம் அமேத்யமாகும் - ஒருகூறுடம்பாகும் - ஒருபாகமுஞ்சாரமாகி சமானவாயுவினாலே நாடிகளிலேறியுடல் தடிக்கும் - இருகூறுநீயாகில்-ஜலமமாகியவிரண்டுபாகமும் நீயாகுவையானால்-ஒருகூறுநீயாம்— அன்னசாரத்தினாலாகியதேகமும் நீயாகலாம்-மலஞ்சோறிடப்பட்டவுடல்—மும்மலத்திற்கு மூலமானசோற்றையிட்டுவைக்குமுடம்பானது- இழுக்கும்—பொய்யாயழிந்துபோகத்தக்கதென்றறிவாய்-எ-று.

(அவதாரிகை-இருவமது.) (சா [illegible]

[illegible] *

இட்டப்பெறாதேமுனிந்தார்கிடந்தார் *
தளராதுறும்பொன்றுமுயிர்போகவன்றே *
தழற்பள்ளிமீதேதுயின்றார்சகித்தே *

கருத்து.

உடற்குளிருக்கு மொருவனாலன்றி *
கடத்தினாலன்றெனக் காட்டியுரைத்தது. *

பொருள்.

இளராதரத்துன்னுடன்னஞ்சுடக்கை இட்டப்பெறாதேமுனிந்தார்—மிகுந்த ஆவாவுடனே புசிக்கின்றவன்னஞ்சுட- அச்சுடுகையை கையினாற்றொட்டப் பொறுக்கமுடியாமல்கோபித்தவர் - உயிர்போகத்தளராதுறும்பொன்றுங்கிடந்தார்—ஆத்மா பிரிந்துபோக அவயவங்களிலொன்றுஞ் சோர்வின்றி உடல்கிடந்தவராகி - அன்றேதழற்பள்ளிமீதேதுயின்றார்சகித்தே—அப்போதே அக்கினிசயனத்தின் மேலேசகித்து நித்திரைசெய்தார். எ-று. (௬௪)

அன்னத்தின் சுடுகைசகியாதவர் அக்கினிசயனத்தில்படுத்து நித்திரைசெய்தாரெனவே தான்கூடியிருந்தகாலத்தில் சீதோஷ்ணங்கள் சகியாதிருந்தமை- அக்கினியில்வேகவிட்டு உடலபிமானமின்றி ஆன்மாபிரியுமெனவும் - ஆன்மாவுக்குந் தேகத்துக்கும் சம்பந்தமில்லையென்பதூஉம் அறிவிக்கப்பட்டது.

கிடக்குமென்பதைக்கிடந்தானென்றும் - துயிலுமென்பதை துயின்றானென்றும் உயர்வு கொடுத்துக்கூறினர்.

(அவதாரிகை - இதுவுமது.)

நிழற்பாவைகண்ணாடியிற்பாவைகைகால் *
நிமிர்க்குமுடக்குமிவன்செய்தவெல்லாம் [ம்
தொழிற்பாதமிந்த வுடலஞ்செய்தொழிலு
சுடர்ஞானவடிவானவன்செய்தொழிலே *

(கருத்து)

நிழற்குடையோனடில் நிழலாடுமவைபோல்
உடற்குடையோனடி லுடலாடுமென்றது. *

(பொருள்.)

நிழற்பாவை—ஒரொளியிலே நிற்கின்றவனுடைய சாயலாகிய நிழற்பாவையும் - கண்ணாடியிற்பாவை—கண்ணாடி பார்க்கின்றவனைப்போலத் தோற்றுகின்றபாவையும் - கைகாலிமிர்க்கும் முடக்கும் மிவன்செய்தவெல்லாம்—நிழற்குடையவன் கைகால்களை நீட்டிமுடக்கில் இவன்செய்கின்றவெல்லாம் அந்நிழலுஞ்செய்யும் அத்தன்மைபோல - தொழிற்பாதம்—ஒருவனிருந்துசெய்யுஞ்செய்கைக் கிடமாதம் இந்த வுடலஞ்செய்தொழிலுஞ் சுடர்ஞான வடிவானவன்செய்தொழிலே—இந்தத்தேகஞ்செய்யப்பட்ட செய்கைகளெல்

லாம் ஒளியென்னும் அறிவுமயமான ஆத்மா வின் செய்கையென்றறிவாய்-எ-று. (௪௫)

(அவதாரிகை-இதுவுமது.)

அறிகின்றபொருளென்று மறிவானில்வேறே
யானாலிவ்வாக்கைநானென்னலாமோ *
செறிகின்றபுள்ளல்லவே கூடிவ்வகையே *
ஜடமானவுடலின்னில் வேறென்றுதெளியே.

(கருத்து.)

அறிவையறி யுமறிவுநீ குடம்பையும் *
பறவையும்போலப் பகுத்தறியென்றது. *

(பொருள்.)

என்றுமறிவானி லறிகின்றபொருள்வேறே யானால்—எப்பொழுதுந் தன்னறிவினாலறியத் தக்கஜீவாத்மாவுக்கே அறியப்படும்பொருளா கிய பரமாத்மா வேறாயிருக்குமானால்—இவ் வாக்கைநானென்னலாமோ—இந்தமாம்ஸபிண் டமானதேகத்தை நானென்றுசுதந்தரித்துச் சொல்லலாமோ - செறிகின்ற புள்ளல்லவே கூ டு—நெருங்கியிருக்கின்ற பக்ஷியாகுமா கூடு கூடாகுமா பக்ஷி - இவ்வகையேஜடமானவுட லின்னில் வேறென்றுதெளியே—பக்ஷிக்குக் கூடுசம்பந்தமில்லாததுபோல அசத்தானவுட ல் சத்தானவுனக்கு வேறென்றறிவாய்-எ-று.

(இதற்குதாரணம் - பிரமகீதை.)

நடுங்கும்வெங்கானனத்துழல்வோர்க்கு *
நதியெனுஞானநீரன்றி - - *
இடும்பைதீர்ப்பதுவேறிலைநிருவிகற்பத் *
தோயாயிலகுமெய்ஞ்ஞானி - *
குடம்பைநீத்தெழும் புள்ளெனச்சூழ்ந்த *
கொடுஞ்சடம்வேறாய்நிற்பார் *
தொடங்குவல்வினையெவ்வகையவற்கெய்தும்
துன்னுமோமமன்னிருள்கடலா. (௪௨)

என்பதனாற்காண்க.

மேல் - பஞ்சபூதத்தின்குணத்தை
யருளிச்செய்கின்றார்.

நிலமாகும்வற்பென்றல்நெகிழ்கின்றநீராம் *
நெருப்பாமதிற்சுட்டவெல்லாமுமதிலம் *
சலமானபுகலாதிவாலிர்தவுடலம் *
சடமானவைம்பூதவுருவங்கடாமே. *

(கருத்து)

தெரம்புறமன்னபுனற்கனிவாமெனறும் *
ஐம்பூதமயமாகுமாக்கையென்றனாத்தது *

(பொருள்.)

சடமானவைம்பூதவுருவங்களிர்தவுடலம்—அசத்தாகிய பஞ்சபூதவடிவங்களுஞ்சேர்ந்தாகிய துலித்ததேகம். (அதெப்படியெனில்,) வற்

டென்றனிலமாகும்—உரத்துத் தரிக்கின்றது பிரிதிவிபூதமாகும்- நெகிழ்கின்றநீராம்—குளிர்ந்துபசுஞ்செய்கின்றது அப்புபூதமாகும் அதிற்சுட்டநெருப்பாம் —எல்லாஞ் சுட்டொளிவிக்கின்றது தேயுபூதமாகும்-சலமானவநிலம்—சலித்துத் திரட்டிவிட்பது. வாயுபூதமாகும்—எல்லாம்படுகலாதிவன் -எல்லாப்பூதங்களும் தங்குமிடத்தில் தங்கியிருக்க இடங்கொடுக்கு முதன்மையாகிய ஆகாயபூதமாம் எ-று. (௪௭)

ஐதாடையென்றசெய்யுட்டொடங்கி- நிலமாகும்வற்றென்றசெய்யுளீருக - எட்டுச்செய்யுளும்உடலையிழிவுகூறி நீயன்றென்றுரைத்தது.

(மேல்பஞ்சேந்திரியங்களும் நீயல்லவென்றருளிச்செய்கின்றார்)

விழியைப்புமானெனிவிரவியாதியாலே ௧
விளக்கின்றதல்லால்விளக்காமையாலே ௨
ஒழியப்படுஞ்சன்னமுதலாஞ்சமுந்தன் ௩
உருக்கண்டகண்டல்லையொப்பாகவன்னே ௪

(கருத்து)

பொறியைப்புமானெனிற்பொறியெலாமொன்றல் ௧
அறிவிக்கவறிவதாலன்றவையென்றது ௨

(பொருள்.)

விழியைப்புமானெனி விரவியாதியாலே விளக்கின்றதல்லால் விளக்காமையாலே—நே

த்திரத்தை ஆத்மாவென்று சொல்லலாமென்னில் இரவி-சோமன்-அக்கினி-இவைகளாற்பிரகாசிக்கின்றதல்லாற் றனக்கேஸ்வயம் பிரகாசமின்மையால் ஆத்மாவன்று-ஒழியப்படுங் கண்ணமுதனாள் குருவன்றனருக்கண்ட கண்டன்னையொப்பாகவன்னே—விழியை நீங்கமற்ற-செவி-நாசி-நா-மெய்-யாகிய நான்கு முன்னிடத்திருந்து உருவத்தைக் காண்கின்ற கண்களைப்போல ஒவ்வொன்றறிவிக்க அறிகின்றதல்லது தானே யறிந்து கொள்ளமாட்டாததென்று அறிவாய் எ-று. (சஅ)

இரவியாதியென்றமையால் சோமனக்கினியை வருவிக்கப்பட்டது இச்செய்யுளால் இந்திரியமைந்தும் நீயன்றென் றுணர்த்தது—மேல் ஆகாரத்தின்பாகத்தைவிரித் தருளிச்செய்கின்றார்.

(வேறு)

அழலல்பொருள்களிலும் பவை முக்கூறதின் மூக்கூ ௧
றினியென்புநடுக்கூறு தாமச்சைக்கிடமாகும் ௨
எழில்கொண்டகடைக்கூறு தவக்காவெழுமென்றே ௩
இபனுஞ்மறையர் தங்களிசைக்கின்றதுதானே. ௪

(கருத்து)

அன்புறுமூரலாகியபன்னிமையாம் ௧௧
அன்புசதாறசை நீயன்றென் றுணர்த்தது. ௧௨

(௬௩)

(பொருள்)

அழுதுண்பொருள்களி லுண்பவை முக்கூறு அக்கினியினாலே பக்குவமாகின்ற அன்ன முதலியபதார்த்தங்களைப்புசிக்க அதின்சாரமூன்று கூறாகும்—அதின்முற்கூறணியெலும்பு—அந்த மூன்றுகூறாகிய சாரத்தில் முதற்கூறு ஒழுங்குடைய என்புகட் குரமாகும் - நடுக்கூறது மச்சைக்கிடமாகும்—முன் சொல்லிய மூன்று கூறாகிய சாரத்தில் நடுக்கூறு தசைக்குரமாகும்-எழில்கொண்ட கடைக்கூறு துவக்காயெழுமென்றே—முன்சொல்லிய மூன்றுகூறாகிய சாரத்தில் கடைக்கூறு அழகுபொருந்த சருமமாய் மேலிடுமென்று - இயனான்மறையந்தங்களிசைக்கின்றது—இயல்பாய நான்குவேதத்தின் முடிவுகளுஞ் சொல்லுகின்றது. எ-று.

எகாரத் தேற்றம் - என்பு - தசை-தோலாம் ஆகிய வுடல் நீயன்றென்றது. (௪௯)

மேல்பானம்பண்ணும் ஜலத்தின்பாகத்தை
விரித்தருளிச்செய்கின்றார்.

(வேறு)

உண்ணும்புனல்முக்கூறதின்முதற்கூறுவர்நீரா
உதிரம்நடுவிற்கூறுகடைக்கூறுபிராணன் [ம்
என்னுமேதிலிருகூறலை நீயாயினையன்றே ✻
இறுதின்றபிராணன்லாலை நீயாயிசைகுலைவாய்

(கருத்து.)

அளியொணீர்தன்னுலமுந்தித்தடிக்கும் *
வளிபுநீயன்றெனமறுத்துமுரைத்தது. *

(பொருள்)

உண்ணும்புனன்முக்கூறதின் முதற்கூறுவர்நீராம்— தாகங்கொள்ளும் உதகம் மூன்றுபங்காய்ப்பிரியும் அதில் முதற்பாகம் கரிப்பினையுடையசிறுநீராகும்-உதிரம்நடுவிற்கூறு—இரண்டாவதுபாகம்இரத்தமாகும் - கடைக்கூறுபிராணன்—மூன்றாவது பாகம் பிராணவாயுவாகும். என்னுமதில் — மூன்று கூறாகியவையில். இருகூறவைநீயாயிடினன்றே—சிறுநீர்இரத்தமாகிய இருகூறும் நீயாகுவையாதல்-இறுதின்றபிராணன்னவைநீயாயிசைகுவையே—அமூந்தநிலையுடைய பிராணவாயுவும் நீயாகவுடன்படலாம். எ-று. (ருய)

என்பு-தசை-தோலால்மூடியவுடல் நீயன்றென்றது.

{ பிராணவாயுநீயன்றெனபதை
மேலருளிச் செய்கின்றார். }

(வேறு)

பிராணனுமன்றதுந்தேனுணர்வின்மையா *
லெல்லுணரும்புலன்கள்ளொழிவால் *

பிராணனதென்னில்மன்னனையொழியாது
சேனைநகர்சூழ்வலஞ்செய்பொழுதே.
(கருத்து)
ஆயுங்கருவியோடறிவறுபிராண
வாயுநீயன்றெனமாணவுரைத்தது.
(பொருள்.)

பிராணனதென்னில்— பிராணவாயுதான் ஆத்மாவா மென்னில் - துஞ்சிலுணர்வின்மையால்—சுழுத்தியில்அறிவின்றிச் சடமாய்க்கிடப்பதனாலும் - உணருப்புலன்களொழிவால்—ஞானேந்திரியங்களை நீங்கி யிருப்பதனாலும். பிராணனுமன்று— பிராணவாயும்ஆத்மாவல்ல—அஃது— அந்தப்ராணவாய்வு (நணவாதிதுரியாந்தம்இயங்குவானேனென்னில்) சேனைசூழநகர்வலஞ் செய்பொழுது மன்னனையொழியாது— அரசன்நகர்வலம் வரும்போழ்து அவனைநீங்காமல்சேனைகள் சூழ்ந்துவருதல்போல் கருவிகரணாதிகள் சூழ்ந்துநிற்க ஜாக்ரஸ்வப்ந சுழுப்திகளில் ஆத்மா சஞ்சரிக்கிறகாலத்தில் இந்தஆத்மாவை அந்தவாய்வு நீங்காமல் துரியம்வரைக்கும்இருக்கும். எ-று. (௬௧)

மேல்வருமாறுகாண்க.

{ சுழுப்தியில் ப்ராணவாயு இயங்குதற்கு காரணம் அருளிச்செய்கின்றார். }

கரணமொடுங்கவாயுநிகழ் வென்கொலென்னி
லுடல்காவலாகுமிலதேல் ⁕
மரணமடைந்ததென்றுதமர்சுட்டிடாமுன் ⁕
வளைவாலின்ஞாளிகொளுமே. ⁕

(கருத்து.)

கருவிகளொடுங்கக் காலியங்காவிடில் ⁕
எரியிடுவாரொன்றியங்கியதென்றது. ⁕

(பொருள்.)

கரணமொடுங்கவாயுநிகழ் வென்கொலென்னில்—கருவிகரணங்களெல்லாம் அடங்கிநிற்கப்பட்டசுழுப்தியில் - பிராணவாயுமாத்திரம் உச்சுவாஸ நிச்சுவாஸமாய் நடந்துகொண்டிருக்கின்றது என்னெனில்— உடல்காவலாகும் சுழுப்தியில் தேகத்திற்குக் காவலாகவிருக்கும் இலதேல்— அப்படி உச்சுவாசநிச்சுவாசமாகக் காத்துக்கொள்ளாமல் நீங்கியிருக்குமானால் - மரணமடைந்ததென்று தமர்சுட்டிடாமுன்— இறந்துபோய்விட்டதென்று உரியசுற்றத்தார் தகனம் பண்ணுவதற்கு முன்னமே - வளைவாலின்ஞாளிகொளுமே—வளைந்த வாலினையுடையநாய்கள் ஆகாரமாகக்கொள்ளுமென்று உடலைக்காத்திருக்கின்றது. எ-று. (௩௨)

பிராணவாயுவைக்குறித்துரைத்தமென்று
செப்புனருக்கும்-உதாரணம்
கைவல்லிய உபநிடதத்தில்

பிறிவிதெப்படியென்றக்காற் *
பிணமாருமுடனென்னும் *
அறிவிலைக்கொல்லவேண்டும் *
ஐம்பூதவிகாரமன்றோ *
வெறிபட்டதாற்றருத்திமெக்கின் *
விடுவதுபோலுமெக்கால் *
எறிபிராணனுநீயல்லை *
ரசோகுணவிகாரமென்றோரண். *

என்பதனாற்காண்க.

மேல்பிராணவாயுநீயன்றென்றுரைத்தருள அந்தக்கரணமோநானென்றமாணாக்கனைநோக்கிஅந்தக்கரணமுநீயன்றென்றருளிச்செய்கின்றார்.

இனமுறைவெண்ணவுள்ளக்கரணத்திலொன்றி *
தெனைவாவேதென்றுதெனவால் *
மனமுநீயல்லவென்றவதனுமுமொற்று *
மதியல்லவைந்தவைகயே. *

(கருத்து.)

கனமிக்கவந்தக்கரணத்திலாகும் *
மனமுபுத்தியுநீயலவென்றறிவித்தது. *

(பொருள்.)

மனமுநீயல்ல—மனமுநீயன்று எதனாலென்றென்றால் - இவைமுறையென்னையுள்ள கரணத்திரொன்றிறிதலால்—தத்துவங்களுக்கினையாகிய உருவென்று சொல்லியிருக்கின்ற அந்தக்கரணத்திரொன்றாகிய இந்த மனமென்பதனுமேயும் - இம்மூன்றுமெனலாம் --இந்தச் சேதாதி பிரவஞ்சத்தை என்று பெயர்பதனுமேயும் மனோதானது நீயன்று. ஆகில்புத்திதானென்று சொல்லுவாயானால் - உந்துமபியுமல்ல—பொறியின் வழியே மனதைச்செலுத்துகின்ற புத்தியுநீயன்று - எனனென்றால் உந்தவகையென்றவதனால்—முன்னோர்கள் மனதுக்குச்சொன்னபடியே புத்திக்குஞ் சொல்லியிருப்பதனால்புத்தியுநீயன்று.எ-று-௩)

(இதுவுமது.)

இடரின்புளதாகிலப்பற்றிவற் *
றெண்ணுங்கரணங்களிலையெவரும் *
அடரும்பிறவிக்கடலென்றவரு *
மகங்காரமுநீயலவென்றறிய. *

(கருத்து.)

அகங்காரமனவறிவிலாத்துரிக்குணை *
அகங்காரமுநீயன்றென்றறைந்தது. *

(பொருள்)

அகங்காரமுநீயல — அகங்காரமும் நீயன்று என்னென்றால் - இடரின்புளதாய் — துன்பத்தையேயின்பமாகவுடையதாய் - நிலையற்று — நிலைபெற்ற குணமில்லாததாய் - அறிவற்று — அறிவில்லாததாய் - எண்ணுங் கரணங்களிலாய் - எண்ணப்பட்ட கரண நான்குள் இதுவுமொன்றாகி - எவரும் — யாவரும் - அடரும்பிறவிக்கடியென்று வருமென்றறியே — நெருங்கவந்து சனிக்குஞ் சனனத்திற்கு ஆதிநானென்று வருகின்றதென்றறிவாயென்று. - (௫௪)

(இதுவுமது.)

ஐயப்படலோர்பொருணிச்சயமாய் *
அறியப்படல்யானெனவென்றுமதம் *
செய்யப்படல்செய்வது சிந்தனையாம் *
சித்தம்மதுவன்றென நீதெளியே. *

(கருத்து.)

மித்தையையானென்ன தென்றவிகாரமாம் *
சித்தமுமன்றெனத் தெளியவுணர்த்தது. *

(பொருள்.)

ஓர்பொருணிச்சயமாயறியப்படலையப்படல் — ஒருபதார்த்தத்தை மெய்யெனவறிதலும் — அதில்சந்தேகப்படுதலும் — யானென்றெண்ணமதஞ்செய்யப்படல் யானென்றும் எண்

ஷதென்றும்பெவற்றிலுஞ் செருக்கையுண்டா க்குதலும் — செய்வதுசிந்தனையாம் — இவைகளைச்செய்விக்குஞ் சிந்தனையாகிய — சித்தம்மதுவன்றெனநீதெளியே — சித்தமானதுநீயல்லவென்று அறிவாய். எ-று. (௫௫)

நீயல்லவென்றவர் பூதவிகாரமாகியதேக முதல் சித்தபரியந்தம் நின்னதன்றென் பதை மேலருளிச்செய்கின்றார்.

மூன்றாகவுடம்பதுசித்தமதேமுடிவாக *
மொழிந்தபொருட்டிரடான் *
நின்றாகிலநீயறியும்பொருளாய் *
நிகழ்கின்றதனாலெனநின்மலனே. *

(கருத்து.)

தனுகரணாதிசகலமுமோர்ந்து *
நினைவாலறிவதுநீயலவென்றது. *

(பொருள்.)

உடம்பதுமூன்றாக சித்தமதே முடிவாக — உடலினைக் குறித்துச் சொன்ன - எனதாடை பொன்பூவென்றசெய்யுள்முதலாக - சித்தத்தைக் குறித்து முடிவிலேசொன்ன ஐயபடலென்ற செய்யுளீறாக பதினாறு செய்யுளிலேயும் - மொழிந்த பொருட்டிரடான் — சொல்லித்

கொண்டுவந்த அர்த்தசமூகங்களெல்லாம்—நீயறியும்பொருளாய் நிகழ்கின்றதனால்—உன்னாலேயறியப்பட்டபதார்த்தமாய் விளங்குகையிலே-நின்னாகிலையென நின்மலனே—அறிவுமயமாய் விளங்குகின்ற ஆத்மாவாகிய வுன்னை தல்லவென்றார் மலரகிதரான நந்திபராயண முனிவர். எ-று. (ருசா)

ஆகவிலை யென்பது-ஆகிலையென்று விகாரமாயிற்று.

{தனுகரணாதிக ணீயுமன்று நீன்னதுமன்றென்ற ஆசாரியனை நோக்கி மாணாக்கன் வினைப்பற்று செய்வதை மேலருளிச் செய்கின்றார்.}

உன்னாலறியப்படும்யாவையுமுன்னுயிரன் *
றெனவோதினைபொக்குமெனக் *
கென்னாலறியாதொழியும்பொருளோ *
யானுந்தவநென்றனனென்றலுமே. *

(கருத்து.)

நீயறியும்பொருணீயலவென்றனை *
நாயேற்கொத்ததநானென்றது. *

(பொருள்.)

உன்னாலறியப்படும்யாவையும் முன்னுயிரன்றெனவோதினை—உன்னாலே பகுத்தறியப்

ட்டவையாவத்தும் உன்னுயிரல்லவென்றுதே
வரீர்திருவாய்மலர்ந்தருளினீர் - எனக்கொக்கு
ம்—அவை அடியேனுக்குச்சமாதானமாகவிரு
க்கின்றது—ஆனால் - என்னாலறியாதொழியும்
பொருளோ யானாகுவதென்றனன்— என்னா
லேயறிதற்கரிதாகிய பொருளோ நானாகின்ற
தென்றனன் - என்றலுமே—இப்படிசொல்ல
வே-மாணாக்கனை நோக்கி மேலருளிச் செய்கின்
றார். எ-று. (௫௭)

{ காரியகாரண மித்தன்மையுடையதென்
பதை மேலருளிச்செய்கின்றார். }

அறியாப்பொருள்காரணமாகைகுறித் *
தறியும்பொருள் காரியமாமுலகில் *
நெறியாற்றிகழ்நான்மறையந்தமெலாம் *
நீயன்றெனவோதுநிரந்தரமே. *

(கருத்து.)

காரியமன்றுநீகாரணமாமெனா *
ஆரியன்மகிழ்வோடடிமைக்குரைத்தது. *

(பொருள்.)

உலகிற் குறித்தறியாப்பொருள் காரணமா
கை—உலகத்தினிடத்திலே ஒரு சுட்டுதலினால்
அறிவதற்கு அரிதாகிய பொருளானது காரண
மாகுதல் [அவ்வியவையினால் மூலகாரண

மானபிரமம்--உலகிற் குறித்தறியும் பொருள் காரியமாம்-உலகத்தினிடத்திலே மதித்தறிகின்றபொருளானது காரியமாகுதல் (அஃதெவையெனில்,தேகாதிப்ரவஞ்சம் (ஆகையால்) நெறியாற்றிசழ்நான்மறையந்தமெலா நிரந்தரநீயன்றெனவோதும்--நன்மார்க்கத்தாற்பிரகாசம்பொருந்திய நான்கு வேதத்தின் முடிவுகளெல்லாம்எப்பொழுதுந் தேகாதிப்ரவஞ்சமானகாரியமாகுதலை நீயன்றென்று சொல்லுகின்றது. எ-று. (௫அ)

உலகுகுறித்த என்பதை - இரண்டிடத்துங் கூட்டுக.

{பிரமசைதன்யத்தைக் கட்டுலனுறியத்தக்கதன்றென்றுமேலருளிச்செய்கின்றார்.}

அறியும்பொருளன் றறியாப்பொருளன் *
றறிவாகிய நீயெனுமப்பொருடான் *
பொறியின் வழிநின் றறியும்பொருளோ *
போதக்கண்விழித்தறியும்பொருளே. *

(கருத்து.)

ஊனநோக்கத்திலுணர்ந்தறியாப்பொருள் *
ஞானநோக்கத்தில்நாடுவதென்றது. *

(பொருள்.)

நீயென்னும் அறிவாகியவப்பொருடான்— நீயென்று சொல்லப்பட்ட அறிவாகிய அந்தப்

பொருளானது—பொறியின்வழி நின்றறியும்
பொருளோ அறியும் பொருளன்று—சுரோத்
ராதிஞானப் பொறியின்வழியாக நின்றறிகின்
றபொருளா-அறிகின்ற பொருளல்ல—போதக்
கண்விழித்தறியாப் பொருளென்றறியும் பொரு
ள்—-ஞானக்கண்ணை விழித்தறியாத பொருளெ
ல்லஅறிகின்றபொருள். எ-று- (ருக)

(இதற்குப்பிரமாணம் திருமந்திரம்)

முகத்துக்கண்கொண்டுபார்க்கின்ற மூடர்காள்
அகத்துக்கண்கொண்டுபார்ப்பதேயானந்தம் *
மகட்குத்தாயார்மணாளனோடாடிய *
சுகத்தைச்சொல்லென்றாற் சொல்லுமாறெங்
ஙனே. (என்பதனாற் காண்க)

(ஞானக்கண்ணா லறியும் பொருள் யாதெ
ன்றுமாணாக்கன்வினவவாக்கியார்த்தத்தை
குறிப்பா யருளிச்செய்கின்றார்.)

வேதப்பொருடானிதுவேறுசொலும் *
வினையானையுமன்றொருவேறுமிலாப் *
போதப்பொருடந்தமலேறக்கலிடாம் *
புனிதப்பொருடத்வமசிப்பொருளே. *

(கருத்து)

[illegible]த்தாந்தசாமவாரணமுடிவாஞ் *
[illegible]த்த நற்றுச்சுடசிப்பொருளென்றது. *

(பொருள்.)

வேதப்பொருடாணிது—வேதஞ்சொல்லப் பட்ட அர்த்தமெல்லாமிது - வேறுசொலும்வி னையாவையுமன்று — இதையன்றிவேற்றுமை யாகச்சொல்லப்பட்டகருத்துக்க ளெல்லாமன் று-ஒருவேறுமிலாப்பொதப் பொருடந்தம றைக்கணி யாம்—ஒன்றேனும்பேதமில்லாத அபேதஞானார்த்தத்தைத் தரப்பட்டசாம வேதத்திற் தஆபரணம்போன்ற- புனிதப்பொ ருடத்வமசிப்பொருளே— சுத்தார்த்தமான த த்வமசியென்னுமகாவாக்கியார்த்தம்ள-று-சாம வேதப்பொருடந்த மறைக்கணியா மென்ற மையால் சாமவேதமென்று பொருட்படுத்த லாயிற்று.

{ திரிபதார்த்தத்தையும் விகசிதமாக விரித்தருளிச் செய்கின்றார். }

நிமலமாம்பரமதுவெனும்பொரு *
ணீயெனும்பொருள்சிவனே *
அமலமானவிரண்டயிக்கிய *
மசிபதப்பொருளாவதே. *

(கருத்து.)

தம்பதந்தொம்பதந்தான துநீயெனும் *
இம்பரிலசிபதமேமென்றுணாத்தது. *

(பொருள்.)

அதுவெனும்பொருளமலமாம்பரம்—அதுவென்னும் அர்த்தமானது மலாதீதபரப்பிரமம் அதுதத்பதம் - நீயெனும்பொருள்சீவன்—நீயென்னும்அர்த்தமானது சீவன்இதுத்வம்பதம்-அசிபதப்பொருளாவது அமலமானவிரண்டையிக்கியம்—அசிபதப்பொருள் அர்த்தமானது மலரகிதமாகிய சீவேஸ்வராளிரண்டும்ஏகமாகின்றதுஇது அசிபதம்.எ-று-(௯௧)

அதுநீயாமென்பதற்குஉதாரணம்
(ஒழிவிலொடுக்கம்.)

உணைபுணர்த்துப்பாசமுதலியுடையோன் *
றனைப்புணர்த்திநீயெனலுமாங்—கனலில் *
விறகிடமாக்காணிலதன்வெம்மையைவேறுக்கி
அறியங்காப்போலதுநீயாம். *

என்பதனாற்காண்க.

(ஆசாரியனை மாணாக்கன்வணங்கி
ஜீவனும்-பிரமமும்-எப்படி ஐயிக்கியங்கூடுமென்று வினவுகின்றதை
அருளிச்செய்கின்றார்.)

அருமையாகியபிரமமுன்னிலை *
யாகுமாருயிர்பின்னிலை *

இருமையாகுமிரண்டயிக்கிய
மெய்துமாறெவனென்னவே.

(கருத்து.)

பிரமமுன்னிடம்பின்னிடமாருயிர்
இருபதமொன்றுவதெப்படி யென்றது.

(பொருள்.)

அருமையாகிய பிரமமுன்னிலையாகும்—பெருமையினையுள்ள பிரமப்முதன்மையான இடமாயிருக்கின்றது - ஆருயிர்பின்னிலை—யவரிடத்தும் விகுதியாயிருக்கின்ற சீவன் கடையாகியபின்னிடமாயிருக்கின்றது - இருமையாகுமிரண்டயிக்கியமெய்து மாறெவனென்னவே—அம்மைஇம்மையாகிய இரண்டிடத்திலுமிருக்கின்ற பெருமைசிறுமைபொருந்திய பரமாத்மா ஜீவாத்மாவென்னும் இரண்டும்இரண்டறப்பொருந்தும்வகை யெப்படியென்றுமாணாக்கன்கேட்க ஆசாரியர் விடையருள ஆரம்பித்தார் எ-து. (அஉ)

ஆதமென்பதை யிரண்டிடத்துங்கூட்டுக என்னவேயென்னும் எச்சத்தினால். அருளிச்செய்ய ஆரம்பித்தாரென்றுவருவிக்கலாச்சுது.

{ சீவேஸ்வரானுக்குஉபாதிகளால்
பேதமென்றும்மலருளிச்செய்கின்றார். }

உபாதியால்வரு பேதமேயிவர்பேத

மொன்றாமுயிர்க்குறங் *
பாதியாமுடல்போலிறைக்குள *
காரணாதிகள்காயமே *

(கருத்து.)

ாரியவுடலுயிர்க்குண்டதுபோலவே *
ாரணவுடலுள்ளீசற்குமென்றது. *

(பொருள்.)

உபாதியால்வருபேதமேயிவர் பேதம்—ஜீ
வேஸ்வரனுக்கு உபாதியினாலே வரப்பட்ட
பதமேயன்றியிவர்கள்பேதமன்று (அதெப்
படியெனில்) ஒன்றாமுயிர்க்குறங்கபாதியாமுட
போல்—ஒராதாரத்தைப் பற்றிநிற்கும் ஆத்
மாவுக்குப் பொருந்திய கபமாதியாகச்சொல்
ப்பட்டஉடலைப்போல - இறைக்குளகாரணா
கோயங்கள்—ஈஸ்வரனுக்குஉண்டு காரண
மாகியஉடல்..எ-று. (கூ௲)

சீவனுக்கு உபாதியாகிய உடலெவையெனில்
தேகம்-இந்திரியம்-மனம் புத்தி-அகங்காரம்
சித்தம்-பிராணவாயு-ஆகியவேழில்- தேகமா
து-ஞானேந்திரியமான ஸ்ரோத்ராதி-ரு-இ
வற்றின்விஷயமானசப்தாதி - ரு- ஆகிய இவை
தேகம் -௧-இந்திரியமாவது - கன்மேந்திரிய
மானவாக்காதி-ரு-இவற்றின் விஷயமான வச

ஞாதி-ரு- ஆகியஇவையிந்திரியம்-க- அந்தக்கரணம்-ச-பிராணவாயு-க-ஆக-எ-ம்- சிம்வாபாதி எழெனவறிக—கபம்-பித்தம்-வாதம்- இந்நோய்க் தரிபதேகமாகையால் கபாதியாமுடலென்றார்.

{ மேல் - ஈஸ்வரோபாதியை அருளிச் செய்கின்றார். }

ஈசன்முற்றறிவான்வியாபி *
எவைக்குமேதுவியம்பட்டமா *
காசகன்னிருபாதிபாவன *
காரணாதிகளாவதே. *

(கருத்து.)

ஆதிபீசனற்பாவணமிறசா *
மோதியபரனுக்குபாதியேழனாத்தது. *

(பொருள்.)

காரணாதிகளாவது---ஈஸ்வரனுக்குரிய காரணவுபாதிகள் ஏழாவன-ஸர்வஞத்வம்-ஸர்வகாரணத்வம்-ஸர்வாந்தர்யாமித்வம்- ஸர்வேசுவரத்வம்-ஸர்வசிருஷ்டித்வம்-ஸர்வஸ்திதித்வம்-ஸர்வஸம்ஹாரத்வம்- ஆகியவேழில்---ஈசன்-ஸர்வஞன்-ஆனவனு-இந்திரியங்களெல்லாம் ஒன்றறிக்கின்றனவறியாநபடியினுலும்-தானச்சர்வத்தினையும் அறிகையினுலேயும்

சர்வஞ்ஞனென்றது—முற்றறிவான்—சர்வகாரணன்-அதாவது-இந்திரியங்களெல்லா மழிந்தும்தானழியாமலிருக்கையினால் சர்வகாரணனென்றது - வியாபி-சர்வாந்திரியாமி—அதாவது இந்திரியங்களுக்கெல்லாம் உள்ளீடாநின்றிருக்கையினால் சர்வாந்தரியாமி யென்றது-எல்லாக்குமேது— ஸர்வேச்வரன் - அதாவது இந்திரியங்களுக்கெல்லாமேலாய்நின்றுவிளங்குகையினால் சர்வேச்வரனென்றது - இயப்பு மாகாசகம்—சர்வசிருஷ்டி-அதாவது- இந்திரியங்களெல்லாம் தன்னுக்குள்ளே தோன்றுகையினால் சர்வசிருஷ்டியென்றது - நிருபாதி—சர்வஸ்திதி-அதாவது - இந்திரியங்களையெல்லாந்தானே இரட்சிக்கையினாலே சர்வஸ்திதியென்றது - பாவனை—சர்வஸம்ஹாரன்-அதாவது-இந்திரியங்களெல்லாம் தன்னுக்குள்ளே அடங்குகையினால்சர்வசம்ஹாரனென்றதும். ௩-ரு. (௩௬)

{ மேல்அசுத்தசுத்தங்களை உணர்க்கின்றா
மென்பதை அருளிச்செய்கின்றார். }

நீதியாலிருபாதிநீக்கிடில் *
நீயெனச்சொல்பதத்தினும் *

ஆதியாகியதத்பதத்தும் ❋
அசுத்தசுத்தமுளைத்துமே. ❋

(கருத்து.)

ஒழியுநீக்கிடினியல்சுத்தாசுத்தமும் ❋
தாழ்வுயரிரண்டினுஞ்சாற்றுதுமென்றது. ❋

(பொருள்.)

நீதியாலிருபாதிநீக்கிடினீயெனச்சொல்பதத்தினும்—ஞாயமாக இரண்டுபாதியையும்நீக்கினால்த்வம் பதார்த்தமாகியநீயென்றசீவனிடத்தும் - ஆதியாகியதத்பதத்துமசுத்தசுத்த முளைத்துமே—முதன்மையாகின்ற தத்பதார்த்தமான அதுவென்ற ஈச்வரனிடத்தும் இருக்கின்ற அசுத்தத்தையுஞ் சுத்தத்தையுஞ் சொல்லுகின்றோம்.எ-று. (௬௫)

{மேல்ஜீவஅசுத்தசுத்தங்களை அருளிச்செய்கின்றார்.}

ஆகமுன்றிகழேழும்நாளெனல் ❋
த்வம்பதத்திலசுத்தமே ❋
சோகமின்றியசான்றுநாளெனல் ❋
த்வம்பதப்பொருள்சுத்தமே. ❋

(கருத்து)

சாக்ஷிபடமாகுநானென்றசுத்தமும் ❋
சாக்ஷிபசுத்தந்தானுயிர்க்கென்றது, ❋

(பொருள்.)

ஆகமுன்றிகழேழும் நானெனல் த்வம் பதத்திலசுத்தமே—முன்றெரியச்சொன்னதேகமுதலிய வுபாதியேழையும் நானென்று அபிமானித்திருத்தல் த்வம் பதமானசீவனுக்கு அசுத்தம் - சோகமின்றிய சான்றுநானெனல் த்வம்பதப்பொருள்சுத்தமே—முன்சொன்னதேகமுதலியவுபாதியேழையும்நீங்கி அந்தமயக்கமில்லாமல் நாம்சாக்ஷியென்றுகாணல் த்வம் பதார்த்தமாகிய நீயென்றசீவனுக்கு சுத்தம் எ-று. (௯௯)

{மேல் ஈஸ்வர சுத்தா சுத்தங்களை அருளிச்செய்கின்றார்.}

அகிலகாரணமேழும்நானெனல் *
தத்பதத்திலசுத்தமே *
சகலகாரணசான்றுநானெனல் *
தத்பதப்பொருள்சுத்தமே. *

(கருத்து.)

காரணத்தானெனலீசர்க்கசுத்தமும் *
ஆரணன்கரியேசுத்தமென்றவை நற்சநு. *

(பொருள்.)

அகிலகாரணமேழும்நானெனல் தத்பதத்திலசுத்தமே—எல்லாவுலகத்திற்குங் காரணமாகின்ற எழுபாதிகளையுந் தானென்றுங்கொள்ளுகு

ந்தகாலத் தத்பதப்பொருளாகின்ற ஈஸ்வரனுக்கு அசுத்தமாகின்றது- சகலகாரணசான்றுநானெனல் தத்பதப்பொருள்சுத்தமே—வருபாதியையுநீக்கி எல்லாக்காரணத்திற்குஞ் சாக்ஷிதானாயிருந்தகாலத் தத்பதப்பொருளான ஈஸ்வரனுக்குசுத்தமாகின்றது. எ-று. (௬௭)

{மேல் அஸிபதார்த்த மிஃதென அருளிச்செய்கின்றார்,}

செறிந்தகாரணகாரியங்கள் *
சிதைந்துமேலுறச்சித்ததாய் *
அறிந்தகாரணனானுமற்றது *
அசிபதப்பொருளாவதே. *

(கருத்து.)

இதுவதுவுபாதியற்றதமேதாமெனும் *
அதைமறந்ததுசிவஅஸிபதமென்றது. *

(பொருள்.)

செறிந்தகாரணகாரியங்கள்சிதைந்துமேலுறச்சித்ததாய்—நெருங்கிய காரணஉபாதிகாரிய உபாதிகள்கழிந்துமுடிவிற்பொருந்தியசித்தேதாமென்று- அறிந்தவாதனைதானுமற்றது அசிதப்பொருளாவதே— அறிகின்ற சிவ அறிவானதானுமில்லாமல் அதுவாகன்றதே அஸிபதத்திற்சுத்தமாகின்றது. (௬௮)

{ மேல் முக்கிய லக்ஷியார்த்தங்களை
அருளிச்செய்கின்றார். }

அசுத்தமாகியதிருபதத்தினு *
முக்கியப்பொருளாவர்தெ *
விசுத்தமானஇலக்கியப்பொரு *
ளென்றுசொல்லுவர்விமலரோ. *

(கருத்து.)

சுத்தமற்றிருக்கின்முக்கியமிரண்டினும் *
சுத்தமுற்றிருப்பதிலக்கியமென்றது. *

(பொருள்.)

அசுத்தமாகிய இருபதத்தினுமுக்கியப்பொருளாவர்தெ — அசுத்தமாகின்றது - தத்பதம் - த்வம்பதம் · இவ்விரண்டினுமிருந்தபோது முக்கியப்பொருளென்றும் - விசுத்தமானஇலக்கியப்பொருளென்று சொல்லுவர்விமலரோ — சுத்தமாகின்றது தத்பதம் த்வம்பதம் இவ்விரண்டினுமிருந்தபோது லக்ஷியப்பொருளென்றுசொல்லுவார் மலாதீதராகியபெரியோர்கள். எ-று.
(௧௧)

இதன்றாற்பரியம். ஜீவேஸ்வரஸ்வரூபம் உபாதியுடன்சம்பந்தித்திருக்கின்றபோது முக்கியமென்றும், உபாதியைப்பிரிந்தபோது லக்ஷிய

மென்றும், உபாதியை நானென்றபோது அசுத்தமென்றும், உபாதிக்கு சாக்ஷியானபோது சுத்தமென்றுஞ் சொல்லியதாம்.

{ மேல்முக்கியலக்ஷியார்த்தங்களை அருளிச்செய்கின்றார். }

மூரண்டசீவபரங்கடம்முடன் *
முக்கியப்பொருளாவதே *
இரண்டில்வேறறுசிற்சொரூப *
மிலக்கியப்பொருளாவதே. *

(கருத்து.)

இரண்டுடலோடிருப்பது முக்கியம் *
இரண்டுடலற்றதிலக்கியமென்றது. *

(பொருள்)

மூரண்ட சீவபரங்கடம்முடன் முக்கியப்பொருளாவதே—சீவபரங்கள் மாறுபாடாகின்றகாரியகாரணஉடலில் சம்பந்தித்து நின்றபோது முக்கியப் பொருளென்றும் - இரண்டில்வேறறுசிற்சொரூப மிலக்கியப்பொருளாவதே—இவ்விரண்டுபாதியையும்நீங்கிசாக்ஷியாய் நின்றபோது லக்ஷியப் பொருளென்றுஞ் சொல்லப்படுகின்றது எ-று. (எய)

{மேல்உபாதித்வயமும் நீக்கில்ஏகவஸ்து
வாமென்பதை அருளிச் செய்கின்றார்.}

ஊக்கியப்பரசீவர்தங்க ✻
ளுடம்பிரண்டுமிலக்கண ✻
வாக்கியப்படி நீக்கிஞலொரு ✻
வஸ்துவேபரவஸதுவே. ✻

(கருத்து.)

இலக்கணத்தாலுடலிரண்டையுநீக்கிடன் ✻
றுலக்கமாம்வஸ்துசொரூபமொன்றென்றது

(பொருள்)

ஊக்கியப்பரசீவர் தங்களுடம்பிரண்டும்—உயர்ச்சியையுடையபரத்தினது உடலும்-தாழ்வையுடையசீவனதுஉடலும் ஆகியவிரண்டையும்-இலக்கண வாக்கியபபடி நீக்கிஞல்—வேதஞ்சொல்லிப இலக்கண வாக்கியப்பிரகாரம் விலக்கிப்பார்த்தால்---ஒரு வஸ்துவே பரவஸ்துவே—இரண்டற்ற ஒரு வஸ்துவாகிய பிரமமாம். எ-று.—உயர்ச்சியென்றமையால் தாழ்வுவருவிக்கப்பட்டது. (௭௧)

{முன்சொன்ன இலக்கணமித்தனையென்பதை மேலருளிச் செய்கின்றார்.}

(௭௨)

ஒரில்விட்டதும்விட்டிடாததும் *
உபயமுமெனவுணர்வுளோர் *
தேரிலக்கணைதிரிவிதத்தில் *
இசைப்பர்மற்றதியம்புவாம். *

(கருத்து.)

விட்டதும்விடாததுமிரண்டுமானதுமேல் *
விட்டுவிடாததும்விளம்புவோமென்றது. *

(பொருள்.)

உணர்வுளோர் தேரிலக்கணை திரிவிதத்திலிசைப்பர் — அறிவுடையோர்கள் வேதங்களை ஆராய்ந்து அதிலுள்ளலக்ஷணையாக்கியமூன்றுவிதமாகச்சொல்லுவார்கள் - ஒரில்விட்டதும் விட்டிடாததுமுபயமுமென — அவைகளை ஆராய்ந்தறியுமிடத்து-விட்டலக்கணை விடாதலக்கணை இருவகையுமிதுவென்று-மற்றதியம்புவாம் — மற்றையவொன்றுஞ்சொல்லுகின்றோம்.எ-று.

(எஉ)

{ முன்சொன்னலக்ஷணைமூன்றனுள்விட்ட லக்ஷணையையருளிச்செய்கின்றார். }

மஞ்சகூப்பிடுமென்றல்போலவும் *
வடபங்கிரதியுள்ளதே *
விஞ்சகோஷிமென்றல்போலவும் *
விட்டலக்கணையாவதே. *

(கருத்து.)

கங்கையுமஞ்சமுங்கழுநீமோவதுபோல் ※
அங்கமுணக்குவேறுபெனவுளாத்தது. ※

(பொருள்.)

மஞ்சகூப்பிடுகென்றல்போலவும்—கட்டி லின்று கூப்பிடுகென்றொருவன் சொல்லும் அர்த்தம்போலவும்-வடயகீரதியுளளிலிருந்து கோஷிமகென்றல்போலவும்— வடகங்கைக் கணுள்ளதிடைச்சேரியென்றொருவன் சொல் லும்அர்த்தம்போலவும்- விட்டலக்கணையாவ தே—விட்டலக்ஷணையாவது.எ-று.

இதன்றாற்பரியம்— கட்டில்கூப்பிட்டதெ ன்றும்கங்கைக்கணிடைச்சேரியுள்ளதென்றும் ஒருவன்சொல்லுமிடத்து- மஞ்சமானதுமரம் மரமானதுகூப்பிடுமோ - மஞ்சத்தி லொரு வனிருந்துகூப்பிட்டானென்று கொள்ளவே வ்ண்டிற்று-கங்கையானது.ஜலம்- ஜலத்திலே இ டைச்சேரியிருக்கமாட்டாது- கங்கைக்கரையி லேஇடைச்சேரியிருக்கின்றதென்று கொள்ள வேண்டிற்று.இப்படிப்போல ஸ்தூலபாதிக்கு ஞ்சீவன்சாக்ஷியாயிருக்கின்றானென்று கண்டறி வதாம்இதுசம்சற்சுவா க்கியமாகிய விட்டலக்ஷ ணையாம். (எ௬)

{ மேல்விடாதலக்ஷணையை அருளிச்செய்கின்றார். }

செவலைநின்றது வெள்ளைபோயின ❋
தென்றுசெப்புதல்போலவே ❋
கவலையின்றிவிடாதலக்கணை ❋
என்றுநீகொள்கருத்திலே. ❋

(கருத்து.)

திறமொன்றைப்பற்றிநிற்கின்றவாறெனப் ❋
பரனுக்குவேறன்றுயிரெனவுரைத்தது. ❋

(பொருள்.)

செவலைநின்றதுவெள்ளைபோயின தென்று செப்புதல்போலவே—(ஒரு சிவப்புக்குதிரையும்வெள்ளைப்பசுவையுங் கண்டாயோவென்பார்க்கு) சிவப்புநிற்கின்றதுவெள்ளைபோகின்றதென்றுசொல்லுதல்போலவும் - கவலையின்றிவிடாதலக்கணை யென்றுநீகொள் கருத்திலே—மனதிற்றுன்பமின்றி விடாதலக்கணை காட்டித்தென்று நின்கருத்திற்கொள்ளுவாய். எ-று.

இதன்றாற்பரியம்—ஒரு சிவப்புக்குதிரையும்வெள்ளைப்பசுவையுங்கண்டாயோ வென்பார்க்கு-சிவப்புநிற்கின்றதுவெள்ளைபோகின்றதென்னுமிடத்துசிவப்பானவர்ணந்தனியேநில்லாதுவெள்ளையானவர்ணந் தனியேபோகாதுசிவ

பீலையுடையகுதிரை நிற்கின்றதென்றும் -வெள்ளையையுடையபசுவு போகின்றதென்றுங் கொள்ளவேண்டிற்றுஇப்படியாக ஸர்வஞ்யத்வாதிஉபாதியுடையவனைப்போல அதற்கு சாக்ஷியாயிருக்கின்றான்பரன்என்று கண்டுகொள்க.இதற்குவிசிஷ்டவாக்கியம்- ஸோணாயம்பதிஷ்டதி-சுவேதோமாவதி என்னும்விடாதலக்ஷணையாம். (எ௪)

{ மேல்விட்டும்விடாதலக்ஷணையை அருளிச்செய்கின்றார். }

மேவும்விட்டுவிடாதலக்கணை *
மெய்ம்மையாதெனிலிந்தவத் *
தேவதத்தனெனும்பொருட்படி *
சிந்தைசெய்திடுதீரவே. *

(கருத்து.)

அவனேயிவனெனுமருத்தவழியே *
இவனீயதுவெனுமியல்பையுணர்த்தது. *

(பொருள்.)

மேவும்விட்டுவிடாதலக்கணை மெய்ம்மையாதெனில்—சம்பந்தம்விட்டும் விடாதலக்ஷணையினதுஉண்மையாதென்றால்-இந்தவத்தேவதத்தனெனும்பொருட்படி சிந்தைசெய்திடு தீரவே—இந்தவிடத்திற்கண்டது அந்தவ

தத்தனென்ற அர்த்தப்படி சித்திக்கில் சந்தேகந் தீர்ந்துபோகின்றது. எ-று.

இதன்றாற்பரியம்—முன்சொல்லிய ஸம் ஸர்க்கவாக்கியமும் விசிஷ்டவாக்கியமுஞ் சொல்லப்பட்ட உபாத்தீர்ந்து லக்ஷயமானேமென் கிற வாஸநாதோஷமாகிய குற்றம் அகண்ட வாக்கியத்தினாலே நீக்கி ஏகப்பண்ணப்படும்- அகண்டவாக்கியமாவது-ஸோயந்தேவதத்தன் என்றது- ஒருதேவதத்தனாகிய புருஷனுடன் நாம்சிலகாலங்கூடியிருந்தோம் சிறிதுநாளுக் குப்பின்பு பிரிந்துபோயினான் அநேகநாளுக் குப்பின்பு மதுரையில்- இராஜாவாகக்கண்டோ ம்பின்புபிரிந்துபோயினோம் சிலநாளுக்குப் பின்பு சிதம்பரத்தில் சந்நியாசியாயிருக்கக் கண்டோம் அப்போழ்திவன் அந்த தேவதத் தனோ அல்லனோவென்று சந்தேகிக்கையில் அவன்முகத்திலே மறுவுண்டேயென்று பார்க் கும்போது அந்த அடையாளமிருக்கையால் அவனேயிவனென்றுசொல்லப்பட்டது- அப் போது அவனை விட்டன இரண்டிடமும்— இர ண்டுகாலமும்- அவைவிட்டுப்போகவிடாமனி ன்றவன் ஒருதேவதத்தன்மாத்திரம்-அவனைப் போல த்வம்பதமாகிய ஜீவோபாதிக்கும்-தத் பதமாகிய பரவுபாதிக்கும்- சாக்ஷியாய்நின்று

வன் ஒருவனை இப்படியிரண்டுபோதியும்போக இரண்டிடத்தும் நின்ற-ஜீவனைபரன். பரனை ஜீவனென்று ஏகமாகக்காண்பது விட்டுவிடா தலக்கணைபாலென்றதாம். (எ௫)

(மேல் விட்டும் விடாதலக்கணையின்படி நீ கொள்ளவேண்டிய தென்பதை அருளிச் செய்கின்றார்.)

விட்டலக்கணை தனையும்விட்டு *
விடாதலக்கணைதனையும் நீ *
விட்டுவிட்டுவிடாதலக்கணையால் *
விளங்குவிளங்கவே. *

(கருத்து)

முன்னிருவிலக்கணை முழுதையுநீக்கி *
பின்னொருவிலக்கணை கருத்தமாகென்றது. *

(பொருள்.)

விட்டலக்கணைதனையும்விட்டு—கட்டில் கூப்பிடுமோ அதிலொருபுருடனிருந்து கூப்பிடுகின்றானென்றும்—கங்கைசத்திக்குமா கங்கைக்கரையிலிருக்கும் இடைச்சேரிசத்தமென்றறிவதுபோலும் ஏழுபாதிக்குஞ் சாக்ஷியாயிருந்தான் ஜீவனென்றறியச்செய்த விட்டலக்கணையும்விட்டு - விடாதலக்கணையும்விட்டு—இவப்புநிற்கின்றது வெள்ளைபோகின்றதென்

ணில் சடமானநிறம்ஒடுமா நிற்குமா குதிரை யைப்பசுவைப்பற்றி நிற்குமோடுமென்றறி வதுபோலும்- ஏழுபாதிக்குஞ் சாக்ஷியாயிருந் தது பரமென்றறிவித்த விடாதலக்ஷணையும் விட்டு - நீவிட்டுவிடாதலக்கணையால் விளங்க வேவிளங்கு—(மாணாக்கனே)(நீ) முன்சொல் லிய இரண்டிலக்கணையின் பயனையும்விட்டு- விட்டுவிடாதலக்கணையினாலே பிரகாசமாகத் தெளிவாய்.எ-று.

இதன்கருத்துப்பரியம்—தேவதத்த னணவன் இரண்டிடமும் இரண்டுகாலமும் நீக்கிப்பார்க் கில் ஒருதேவதத்தனே யானதுபோல காரிய உபாதியையுங்காரணஉபாதியையும்-நீக்கிப்பா ர்க்கில்பரிபூரணமாய் விளங்குகின்ற பரமே நீ யென்றறிவித்தாம். (எஈ)

(இதுவும்அது.)

போதுமேவிய தேயம்விட்டொரு *
புருடனைக்கொளும்வாறுபோல் *
ஓதும்மிருடல்கண்டுவிட்டதன் *
உண்மைகாணவுணர்ந்திடே. *

(கருத்து.)

காலதேயம்விட்டவன்றனைக் *
காண்டல்போல் *

தூலம்விட்டுண்மையைத் *
தொகுத்தறியென்றதும் *

(பொருள்.)

போதமேவிய தேயம் விட்டொரு புருடனைக்கொளும்வாறுபோல்.... அந்தக்காலம் இந்தக்காலமென்று சொல்லுங் காலத்தையும் அந்ததேயம் இந்ததேயமென்றுசொல்லுந்தேயத்தையும்நீக்கிவிட்டு ஒருதேவதத்தனாகியபுருடனை அவன்தானிவனென்று அறிந்துகொள்ளும்வகைபோல- ஒராபீருடல்கண்டு விட்டதனுண்மைகாண வுணர்ந்திட---முன் சொன்னகாரியகாரண உடல்இரண்டையும் ஈதென்று அறிந்துநீக்கி இரண்டிடத்துமிருந்தது ஒன்றுதானென்று அதனுண்மையைக்கண்டறிந்துகொள்.எ-று. (எஎ)

{மேல் உபாதிகளை நீக்கி சாக்ஷியைக்கண்டு கொளென்பதை அருளிச்செய்கின்றார்.}

பிரியாவுயிர்காரியமாமுடலும் *
பிரமத்துறுகாரணமாமுடலும் *
கரியானதைவாதனையுந்தவிரக் *
காட்டும்படிகண்டுகொள்கண்ணுறவே. *

(௭௩)

(கருத்து.)

ஈசனுயிருடலிரண்டையநீத்து நீ *
மாசறுசாக்ஷியின்வழிகாணென்றது. *

(பொருள்.)

உயிர்பிரியாக்காரியமாமுடலும்—சிவனைவிட்டுப்பிரியாதகாரிய வுபாதியென்னுந் தேகமும் - பிரமத்துறு காரணமாமுடலும்—பிரமத்தைப்பொருந்திய காரணவுபாதியென்னுந் தேகமுமாகிய - வாதனையுந்தவிரக் காட்டும்படி—இரண்டுவாசனவுபாதிகளு நீங்கநாங்காண்பித்தபடியே - கரியானைக் கண்டுகொள் கண்ணுறவே—சாக்ஷியாகியதை அறிவினிடமாகப்பொருந்தக் கண்டுகொள். எ-று. (எஅ)

{ அந்தக்கரணங்களிருந்தாலும் நீங்கினாலும் சைதன்னியத்தை யறியக் கூடாதென்பதை மேல் அருளிச்செய்கின்றார். }

கரணத்திரளிற்பினுமப்பொருளை *
காணக்கிடையாதவகையறவே *
மரணப்படினுமதாங்கொளும் *
வழியில்லையெனும்படிநீயறியே. *

(கருத்து.)

கரணங்களிற்பிறங்[illegible] *
மரணங்களைப்[illegible]வழியில்லையென்றது. *

(பொருள்.)

கரணத்திரளினிற் பிறம்பொருளைக் காண த்திடையாது—அந்தக்கரணக்கூட்டங்கள் தமது கௌரவங்கெடாமனிற்கினும் அந்தப்பிரமத்தைக்காண்பது அரிது—அவ்வகையறிவே மரணப்படினுமது கண்டுகொளும் வழியில்லை—அவ்வந்தக்கரணங்கள் இறப்பினும் பிரமத்தைக் கண்டுகொள்வதற்கு மார்க்கமில்லை—எனும்படி நீமதியே—என்றபிரகாரத்தையுனது விவேகத்தினாலே அறிந்துகொள்வாய். எ-று.

இதன்றாற்பரியம்—அந்தக் கரணமானது ஆதித்தன்சந்நிதியில் வைத்ததீபம்போலகௌரவங்கெட்டிருந்தால் சைதன்னியத்தைப்பொருந்தலாமென்றது. ஆதித்தனைப்போல அறிவு-தீபம்போல அந்தக்கரணமெனவறிக. (௭௧)

அவஸ்தாத்திரயத்தில் அந்தக்கரணாதிகள் வியாபிக்கின்றதை மேல்
அருளிச் செய்கின்றார்.

ஏந்தக்கரணங்களுமேவல் நனு
இதில்லாதனபாம்விஷயங்களோடே
அந்தக்கரணங்கள் பொருந்தல்களு
அவையாய்நல் சாஷீப்பதியவத்தையதே.

(கருத்து.)

நனவுங்கனவுநாட்டியசுஷுப்தியும் *
இனமிதுவென்னவிளங்கவுரைத்தது. *

(பொருள்.)

எந்தக்கரணங்களுமேவல்நனவு — எல்லாத்தத்துவங்களுந் தனதுசெய்கைகளைச் செலுத்துமிடஞ் சாக்கிரம் - இதில்வாதனையாம் விஷயங்களொடே அந்தக்கரணங்கள் பொருந்தல்கனவு — சாக்கிரத்தில் நின்றதத்துவங்களில் வாதனைக்குரியவாக்காதிகளுடனே அந்தக்கரணம்பொருந்திநிற்கின்றது ஸ்வப்நம் — அவைமாய்தல் சுஷுப்தியவஸ்தையதே — ஸ்வப்நத்தில்நின்றதத்துவங்களுமிறந்துநிற்கின்றதேசுஷுப்தியென்றவாறு.

இதன்றாற்பரியம் — அவஸ்தாத்திரயத்திலும் போறதும் வாறதுமாய் வியாபித்திருக்கும் அறிவென்றதாம். (அ௰)

{ நனவில்சுஷுப்தியுநின்னைசதன்னியம் பிரகாசிக்குமென்பதைமேல் அருளிச் செய்கின்றார். }

[வேறு.]

வினவிற்பரத்தையறிவுறுதற்கவத்தைபுலன் *
வினைமாற்றியே *

நனவிற்சுழுத்திநிலைவரினப் பொருட்டிகழும் *
நலமாகவே. *

(கருத்து.)

சாக்கிரந்தனிலறி தூக்கம்வந்துற் றிடின் *
நீக்கமில்லாப்பரநிலைவருமென்றது. *

(பொருள்.)

பரத்தை யறிவுறுதற்கு வினவில் அவத்தை புலன்வினைமறைய—பிரமத்தைஅறிவுபொருந்துதற்கு(எவ்விதமென்று (நீ)கேட்கில்அவத்தைகளில்நின்ற அறிவு-அவ்வவ்வவத்தைகள்மயமாய் நிற்குமச் செய்கை நீங்கி — நனவிற்சுஷுப்திநிலைவரினப்பொருட்டிகழு நலமாகவே—ஜாக்ரத்தில் சுஷுப்தியின்செய்கை வருமாகில் அந்த பிரமமானதன்னியம் நன்மைபெறப் பிரகாசிக்கும். எ-று. (அ௩)

நனவிற்சுழுப்திக்கு தாரணம்
(கைவல்லியம்.)

அனுபவானந்த வெள்ளத் *
தழுந்தியேயகண்டமாகித் *
தனுகரணங்களாதிச் *
சலமுமிறந்து சித்தாய் *
மனதுபூரணமாய்த்தீர்த்த *
மானசற்குருவுங்காண *

நன்வினிற்சூழ்த்தியாகி *
நன்மலன்சுபாவமானான். *
என்பதனாற்காண்க.

(சீவத்தன்மையினுமென்றும் ஈசுவரத்தன்
மையினுமென்றுமேலருளிச்செய்கின்றார்)

துவிதத்தவத்தைகளையறிவுற்றவத் *
துரியநிலைசீவனே *
இவிதத்திலப்புருடனைவுற்றவத் *
துரியநிலையீசனே *

(கருத்து.)

சீவவறிவினைத்திருப்பியேபிரம *
பாவனையறிதுயிற்பண்பென்றுரைத்தது. *

(பொருள்.)

துவிதத்தவத்தைகளையறிவுற்று — இரண்டு விதஅவத்தைகளைப்பொருந்தஅறிந்து — அவத்துரியநிலை - அவைகளுக்குரித்தாகிய நிலைகளைப்பெற்றிருந்த — அப்புருடன்சீவனே - அந்தப்புருஷனுஞ் ஜீவன்றானே — இவிதத்தில் இந்தவகையில்கண்டசாக்ஷியைநீக்கி — நனவுற்றவத்துரியநிலையீசனே — நனவில் அந்தத்துரியவறிவுபொருந்துமாகில் நிலைபெற்றவீசுவரத்தன்மையாம். எ - று. (அஉ)

{ மகாவாக்கியார்த்தத்தை
மேல் அருளிச்செய்கின்றார். }

அகிலக்கரிப்பரம துரியப்பொருட்பெரிய *
மதுவாகையே *
புகலுற்ற தத்வமஸி யெனுமுப்பதத்தின் *
முடிபொருளாவதே *

(கருத்து)

முப்பதமுடிவினின் முதற்பொருளாமது *
செப்பியகாரியாஞ் சகத்திற்கென்றது. *

(பொருள்.)

அகிலக்கரி—ஜகத்திற்குச் சாக்ஷியாகவிருக்கின்றபிரமமும் பரம துரியப் பொருள்—அதிரகசியார்த்தமான ஜீவசாக்ஷியாகிய கூடஸ்தனும் - துரியம துவாகையே—ஏகமானபிரமமாகுகையே - புகலுற்ற — வேதமுடிவாகிய மகா வாக்கியஞ்சொல்லுகின்ற - தத்வமஸி யெனும்—தத்பதம்—த்வம்பதம் - அஸிபதம்- என்னும் - முப்பதத்தின் முடிபொருளாவதே — மூன்றுபதத்தினுமுடிவினின்ற பதத்தினேகமாகிய அர்த்தம். (எ-று.) என்னவே ஜீவேசுவரவாச்சியநீங்கி கூடஸ்தபிரமமாகுதலென்பார் முப்பதத்தின் முடிபொருளாவதென்றார்.

இதற்குதாரணம் - சொரூபானந்தர்
(அன்னைப்பத்து.)

தத்பதந்தொம் பதந்தாமாயவப்பதம் *
இப்பதமானவரன்னே யென்னும் *
இப்பதமாயவியல்லை யிதுவென்று *
செப்பமுடியு மோவன்னே யென்னும். *

என்பதனாற்காண்க. (அங்)

[மேல்வேதாந்த வுபதேசஞ் செய்த ஆசாரியனை மாணாக்கன் வணங்கி விண்ணப்பம் பண்ணிக்கொள்வதை யருளிச்செய்கிறார்.]

நிமலப்பொருட்சுருதிநெறியிற்பெறக்கருணை
நிதிகூறவே *
அமலப்பொருட்பெறுதலருமைத்தெனக் *
கழறியடிவீழவே. *

(சுருக்கு.)

சுருதிநெறிபெறச்சொற்குரு பதத்தினில் *
அரியதென்ற வனுமறைந்து தொழுதது. *

(பொருள்.)

நிமலப்பொருள்—சுத்தார்த்தமாகியபிரமத்தை-சுருதிநெறியிற்பெற—வேதஞ்சொல்லிய மார்க்கப்படி பெற்றுக்கொள்ள - கருணைநிதி கூறவே—கிருபாநிதியாகிய ஆசாரியர் அருளிச்செய்யவே- அமலப்பொருட்பெறுதல்— சுத்த

தார்த்தமான பிரமத்தை அடியேன் பெற்றுக் கொள்வது - அருமைத்தெனக் கழறியடிவீழவே — அரியதன்மையென்று விண்ணப்பஞ் செய்து ஆசாரியர் திருவடிகளில் மாணாக்கன் விழுந்து சேவிக்க.எ-று. (அச)

{ சேவித்துநிற்குமாணாக்கனுக்குஆசாரியர் உரைங்களிலூர்ந்து பிரமோபதேசஞ்செய் யும் பொருட்டு பூர்ணாபிஷேகஞ்செய்த தை மேல் அருளிச் செய்கின்றார். }

தமரக்கலைக்களவுதெரிவற்றதற்பொரு *
ளதனையீகுவான். *
அமரர்க்கரப்பரியபதநற்புனற்கொடு *
செய்தபிஷேகமே. *

(கருத்து.)

தற்பொருளருள்குருசசிவர்ணனுக்கு *
நற்பதப்புனலபிஷேகமுநவின்றது. *

(பொருள்.)

தமரக்கலைக்களவுதெரிவற்ற — ஒலிக்கப்பட்ட கலைஞானங்களினளவிட்டறிதற்கரிய - தற்பொருளதனையீகுவான் — அதுவென்னுமர்த்தமானவதனை அளித்தருளும்பொருட்டு-அம

(௰௪)

ரர்க்களப்பரிய பதநற்புனற்கொடு.....தேவர்க ளுக்கும்அளவிடற்கரியமகிமைதங்கியபாதோ தகத்தினாலே - அபிஷேகமே— சிஷ்யனுக்கு அபிஷேகஞ்செய்தருளி. எ-று.

குருபாதோதகத்திற் குதாரணம்
(கைவல்யம்.)

குலவுசற்குருவின்பாதக் *
குளிர்புனற்றலைமேற்கொண்டால் *
உலகிலிற்றீர்த்தமெல்லாம் *
உற்றபேறடைவர்போல *
நலமெய்யாகியகைவல்ய *
நவநீதநூலைக்கற்றால் *
பலகலைஞானநூல்கள் *
படித்தஞானிகளாய்வாழ்வார். *

என்பதனாற்காண்க. (அரு)

{ ஆசாரியர்தனது சேஷமளித்துமாணா
க்கனுடற்பகை நீக்கியதை மேலருளிச்
செய்கின்றார். }

பவனத்தில்வைத்த வழுதினின்மிச்சிலிட்
டினிபபரிவோடுமா *
தவனைப்பொடிக்கவசமெனவிட்டுடற் *
பகைகடலைசாயவே. *

(கருத்து.)

வெண்பொடியளித்தவன்வினைக ணீக்கியபின்
உண்டதன்சேடமுதவிய துணாத்தது. *

(பொருள்.)

உடற்பகைகடலைசாய — உடற்பகைகளும் உயிர்ப்பகைகளும — உட்பகைகளும் - தலையெடாமல் நீங்கும்பொருட்டு - மாதவளப் பொடிக் கவசமெனவிட்டு — பெருமையுந் தூய்மையமுமுள்ள விபூதியினாலே - கவசந்தரித்ததுபோல நுதல்முதற் றேகத்திற் றரித்து - பவனத்தில் வைத்தவமுதினினிய — தேவாலயத்தில் வைத்திருக்கின்ற அமுதினு மினிதாகிய - மிச்சில் பரிவோடுமிட்டு — தமது பரிகலசேஷத்தை அன்புட னளித்தருளி. எ - று.

உடற்பகைகளாவன, — அனல் - சீதம் - அசனி - புனல் - வாதம் - விஷம் - ஆயுதம் - மருந்து - பசி - தாகம் - பிணி - முனிவருமை. உயிர்ப்பகைகளாவன, — காமம் - குரோதம் - லோபம் - மோகம் - மதம் - மாச்சரியம் — பயம் - வெகுளி - உவகை - நினைப்பு - மறப்பு. உட்பகைகளாவன — உறக்கம் - நோய் - மரணம் - இவைகளென்னவாகிக. உடற்பகைகளென்றதனால் - உயிர்ப்பகை உட்பகைவருவிக்கப்பட்டது. (௮௬)

{ மாணுக்கனுடல் பொருளாவிமூ
ன்றையுங் கையேற்றுதீக்ஷ செ
ய்வதைமேலருளிச்செய்கின்றார். }

உதகத்துடற்பொருளோ டுயிர்கைக்கொடுச்சி
மிசைபொருபோதொடே *
பதகைத்தலத்தைவிடவிருகைத்தலத்தோ *
டிருபதமேவவே. *

(கருத்து.)

உடல்பொருளாவிபுகையேற்றபின் *
திடபதந்தலையிற்கைதீக்கைசெய்தென்றது. *

(பொருள்.)

உதகத்துடற்பொருளோடுயிர்கைக்கொடு—(மாணுக்கனுகியசசிவர்ணன்) உதகசகிதமாயுடல்-பொருளாவிமூன்றனையுந்தத்தஞ்செய்ய அதை ஆசாரியர்கைக்கொண்டு - உச்சிமிசைபொருபோதொடே பதகைத்தலத்தைவிட—உத்தமாங்கத்தின்மீது ஒருபுஷ்பசகிதமாய் அழகுதையமான தமதுகைத்தலத்தைவைத்து அத்தீக்ஷைசெய்ய — இருகைத்தலத்தோடிருபதமேவ—சீஷன் தன திருகைகளினலும் ஆசாரியர் இருதிருவடியையும்பொருந்தப்பிடித்துக்கொள்ளவே. எ-று.

உடல்பொருளாவிமூன்றனையுந்தத்தங்கொ

டுத்தலாவது — உடலைத்தன்னுடைதென் றபிமானி த்தலின் றியிருத்தல் - பொருள்களின்மேற்பற் றுதலின் றியிருத்தல் - - ஆவி - சிவமென் றிவையொ ன்றைச் சுட்டுதலின்றி யிருத்தலாம்.

இதற்குப்பிரமாணம்-பிரமகீதை.

உயர்ந்தமெஞ்ஞான நிட்டையாலனைத்தும் *
உணர்ந்தமேலோர்க்குளமகிழ *
வியந்துடலாவி பொருளையுஞ்சமர்ப்பித் *
திணையிலாப்பிரமவானந்தம் *
தயங்கிடுமுடலபிமானத்தை நீக்கித் *
தனத்தின்மேற் பற்றுதலின்றிச் *
சுயம்பிரகாசச் சிவமலதொன்றைச் *
சுட்டிடாரவர்பதந் துதிப்பாம். *
என்பதனாற்காண்க. (௮௭)

{ ஞானநேத்திரத்தையருளி பிரமாநு பவமுமாமென்றதை மேல அருளிச் செய்கின்றார். }

ஒழிபட்புலக்கணுய நிடதப்பொருட்டெரிய *
வுஞ்ஞானமாம் *
விழியையக்கொடுத்து மொழி யெனமுப்பதப் *
பொருளுநம்வெளியாகவே. *

(கருத்து.)

ஊனக்கணன்றென் றுளக்கண்ணளித்தபின் *
ஞானப்பொருளநுபவ முளதாமென்றது. *

(பொருள்.)

புலக்கணொழியவுள ஞானமாம் விழியைக் கொடுத்து—புலன்களிலொன்றாகிய விழியாற் பார்க்கின்றதையொழித்து உள்ளேபிரகாசித்தறியும் பேரறிவாகிய ஞானநேத்திரத்தைக் கொடுத்தருளி - உபநிடதப் பொருட்டெரியமுப்பதப் பொருளும் வெளியாகமொழியென்னவே—உபநிஷத்து அர்த்தந்தெரியும்படிக்கு திரிபதார்த்தமும் பிரகாசமாகச் சொல்லென்று கேட்கவே. எ-று.

அங்ஙனமாசாரியருபதேசித்ததும், இங்ஙனமாணாக்கனேற்றுக்கொண்டதும், சம்பிரதாயமெனவறிக. (அஅ)

{ மாணாக்கன் அவஸ்தாதரிசனஞ் செய்து அநுபவமுளாக்கின்றதை மேல அருளிச்செய்கின்றார். }

நனவைத்துலக்கிமுடி துரியத்தைமுற்றவிறை
நவில்நீதியே *
மனவர்க்கமற்றவநு பவமூற்றிசிற்கனவின் *
வழிபோதுவான். *

(கருத்து.)

கண்டல்காணுதவை யரணமடங்கியே ※
கண்டவநுபவங் கழறுவனென்றது. ※

(பொருள்.)

நனவைத்துவக்கித்துரியத்தைமுடிமுற்ற— சாக்கிராவஸ்தை முதலாகத்தொடங்கி துரிய முடிவாக முழுமையும்-இறைநவில்நீதியே— ஆசாரியரநுக்கிரகஞ்செய்தருளியஞாயப்படிக் கே-மனவர்க்க மற்ற—டனம் புத்தி-அஹங் கார சித்தங்களும் தனது செய்கை யற்று- அநுபவமூர்த்தி—அநுபவ முதிர்ந்து-சிற்சனை வின்வழிபோதுவான்-அறிவுநித்திரையிற்கண் டயாகூஷிகளைச்சொல்லத்தொடங்கினன்.எ-று. (௮௧)

சாக்கிரதரிசனத்தை
மேலுரைக்கின்றார்.

புரணபாகியபுறப்புள ※
புலன்களுமந்தக் ※
கரணம் யாவையுமொடுங்கிட ※
நனவெனக்கண்டேன். ※

(கருத்து.)

புறவுயிரொடுமே போகமபொருந்திடம் ※
சகமுகநனவெனத் தானறிந்துரைத்தது. ※

(பொருள்.)

புராணமாகியபுறம்புளபுலன்களும் — நிறைவு காணாநின்றபுறக்கருவிகளாகியசத்தாதிகளைந்தும் வசனாதிகளைந்தும் — அந்தக்கரணம் யாவையும் ஒழுங்கிடநனவெனக்கண்டேன் — மனாதிநான்குங்கூடி உலாவுகின்றவிடத்தைசாக்கிரமென்று கண்டறிந்தேன். எ-று.

யாவையுமென்றமையால் பிராணவாயுவையும் அபிமானிவிஸ்வனென்றுங் கூட்டிக்கொள்க.

இதற்குதாரணம் - பரிபூர்ணப்ரகாச நாயனார் திருப்பள்ளியெழுச்சி.

உற்றறிவெழுவுளவிருளான்றதுபோல் *
உதயமலைத்தெழுவுதொளிபகன்றனவால் *
நற்றுடலுயிர்பொருளட்புடன்கலந்து *
நான்மலர்த்தாளிணைநாயினேற்கருளிச் *
சற்றெனவிசுவசாக்கிரகரணங்கள் *
சதுர்த்தெசசெலவுகளலம்பரிப்பொன்றிற்
பற்றுநிலைசமுகர்பதமெனவருளப் *
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. *
என்பதனாற்காண்க. (௯௰)

மேல் ஸ்வப்ந தரிசனத்தை யுரைக்கின்றார்.

பூரணமாகியபுறம்புள *
 புலன்கெடவந்தக் *
கரணம்யாவையும் வழங்கிடக் *
 கனவெனக்கண்டேன். *

(கருத்து.)

நாலுடனாறுநனவிலிருந்திடக் *
காலுறுகரணமார்கனவையுரைத்தது. *

(பொருள்.)

பூரணமாகிய புறம்புளபுலன்கெட — நிறைவுகொண்டிராநின்ற புறக்கருவி சப்தாதிமனோதிபத்துநீங்க- அந்தக்கரணம்யாவையும்வழங்கிடங் கனவெனக்கண்டேன் — மனம்-புத்தி-அஹங்காரஞ்-சித்தமிந்நான்குமுலாவுகின்றஇடத்தை ஸ்வப்நமென்று கண்டறிந்தேன்.எ-று.

(உதாரணம்.)

அண்டரும்பரமெழுவறிவகன்றதுபோல் *
 ஆதவனெழவுடுமதியகன்றனவால் *
கண்டிசைதொறுந்திரிந்தெனையறியாதே *
 எய்த்தெனையாண்டதைசதமெனுமதிலே *
கண்டுகொள்கனவையில் வனமெனவிருத்தித்

காமியதர்மதுட்கரணங்களுட்னே
பண்டுபல்களந்தவர்பதமெனவருளப்
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. கூக.

{மேல் சுழுப்திதரிசனத்தை
யுரைக்கின்றார்.}

மரணமாகியதிசையிது
வெனும்படிமனுதி
கரணம்யாவையுமிறந்துள
சுழுத்தியுங்கண்டேன்.

(கருத்து.)

மழுக்கலாய்மனுதிமாய்ந்துகிடந்திடம்
சுழுப்தியாமவையுஞ் சுபாவமென்றுரைத்தது.

(பொருள்.)

மரணமாகியதிசையிதுவெனும்படி—அனித்தியமாகியகாலமிதுவென்றுசொல்லும்படிக்கி-மனுதிகரணம் யாவையுமிறந்துள சுழுத்தியுங்கண்டேன் — மனமாதியாகிய கரணங்கள் யாவையும் பதைப்பற்று ஆலின்விதை போலுள்ள சுழுத்தியையுந்தரிசித்தேன். (எ-று.)

அவ்யத்தம்-மூலப்பிரகிருதி-சீவகாரணதேகம்-முதற்பாழெனவுங்கொள்க. வடவித்தான்று சாகோபசாகைகளையும் பஞ்சவர்ணங்களை

யுந்தன்னுக்குள்ளடக்கித்தானனுப்போலவிருக்
கின்றதை அவ்வியத்தமெனக்காண்க.

(உதாரணம்.)

பத்துடனலையும்பதைப்பறவிருத்தி ✻
பாரிருந்திவ்வண்ணமென்றருள்புரிய ✻
அத்தமதருவமதாயினதென்ன ✻
அதுமிதுசுழுத்தியவ்வியத்தமாமாயை ✻
உத்தமவுருத்திரபதமுநற்பிரகிருதி ✻
உனதுடலாமுதற்பாழ்சகலகலை ✻
பத்தியதபிரானஞ்ஞனெனவருளப் ✻
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. ✻

என்பதனாற்காண்க. (௧௨)

(மேல்துரியதரிசனத்தையுரைக்கின்றார்)

எஞ்சலின்றியெக்கரணமும் ✻
இறந்திருண்டிருந்த ✻
துஞ்சலங்குணர்போதமாம் ✻
துரியமுங்கண்டேன். ✻

(கருத்து.)

குறியாம்மூன்றையுங் குறித்திடுஞ்சித்தம் ✻
அறியாதறிவே துரியமதென்றது. ✻

(பொருள்.)

எஞ்சலின்றி யெக்கரணமும் — குறைவில்
லாத எல்லாத் தத்துவமும் - இறந்திருண்டிரு

ந்தநிஞ்சல் — இறந்து இருண்மையமாகி நிலை பெற்றிருக்கின்ற-அங்குணர்போதமாம் துரிய முங்கண்டேன் — அவ்விடத்தி லமிகின்ற அறி வாகிய துரியமூர்த்தரிசித்தேன். எ-று.

நனவிலுங்கனவிலுஞ்சுழுத்தியிலு மிருந்த றியும் அறிவாகிய சாட்சியே துரியமென்பார்க ளுணர்போதமாந் துரியமென்றார்.

இதற்குதாரணம்,

(தத்வராயஸ்வாமிகள் பாம்பாட்டில்.)

மனமுதலானகரணமெல்லா *
மாயவருள்செய்தாராணைபாணை *
நனவிலுங் கனவிலுஞ்சுழுத்தியிலும் *
நானேதானானெனென்றாடாய்பாம்பே. *
என்பதனாற்காண்க. (கூரு)

{மேல் பரசாக்கிர தரிசனத்தை யுரைக்கின்றார்.}

துரியமாகியபோதமோர் *
துளக்கமற்றனைத்துங் *
கரியதாயிருந்திடம்பரதன *
வெனக்கண்டேன். *

(கருத்து.)

சாக்ஷியாங்காரணகாரிய மெவைக்கும் *
சாக்ஷியைகிடம் பரசாககிரமென்றது. *

(பொருள்.)

துரியமாகியபோதம்—காரிய வுபாதியாகிய
-தூலசூக்ஷம காரணதேகத்திரையமும்— நன
வுகனவுசுழூப்தி-அவஸ்தா திரயமும்-விசுவ-
தைசத-பிராஞ்ப-அபிமானித்திரயமும்-ஆகிய
இவைகளை சங்சர்க்க வாக்கியத்தால் வேறுசெ
ய்து மேல்சேபுித்துநின்றஅறிவு—ஓர்மூலக்க
மற்றனைத்தும் - இசைவுமின்றி முன் செல்
லியவனைத்திற்கும்- கரியதாயிருந்திடம்பரந
னவெனக்கண்டேன்— சாக்ஷியாயிருந்தஇட
த்தை பரசாக்கிரமாகதரிசித்தேன். (எ-று.)

(உதாரணம்.)

விரிவுறுகாரிய வுபாதிகளெல்லாம் *
வேறுசெய்தறிவிராட்புருடனையெனவும் *
கரியதுவாகநின்றன்னவைமுழுதும் *
கழன்றனசங்சர்க்கவாக்கியமதனல் *
துரியமதனையறிதொம்பதமசேர் *
சொல்லுமுற்பூரண சோதியிலென்னைப் *
பரநனவிற்கரமணியெனவருளப் *

பரிபூர்ணனே பள்ளியெழுந்தருளாயே. ※
என்பதனாற்காண்க. (கூச)

(மேல்பாஸ்வபந்தத்தையுரைக்கின்றார்.)

புணர்ந்தவிச்சகத்தோர்ந்துணர் ※
போதமார்தனையே ※
உணர்ந்தமற்றதுபரகனவெனும் ※
படியுணர்ந்தேன். ※

(கருத்து)

பரநனவதனிற் பகுத்துணர்தனையும் ※
திரமுறுவதுபரகனவென்றுரைத்தது. ※

(பொருள்.)

புணர்ந்தவிச்சகத்தோர்ந்து — ஐம்பொறியொ ன்றநனவில் சாக்ஷியை ஆராய்ந்து - உணர்போ தமார்தனையே — அறிகின்ற அறிவாகியதன்னை யே-உணர்ந்தமற்றது பரகனவெனும்படி பு ணர்ந்தேன்— அறிவுற்றிருந்ததை பரகனவாகு த்தரிசித்தேன். எ-று.

(உதாரணம்.)

காலமுநாளுஞானமுமேயமும் ※
கண்டவளென்னி விராசதமாயைய ※
மேலொடுகிழ்பக்கம்விரவியபின்முன் ※
விரிவுறுமவைபவமாயினவெல்லாம் ※

சாலவுமிரணியகர்பமுமிதுதான் ❋
சதாசிவகாலபரன்கனவிதுவே ❋
பாலுயர்காரணவுபாதியென்றாளாய் ❋
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. ❋

என்பதனுற்காண்க. (சுரு)

(மேல்பரசுழுப்தியையுரைக்கின்றார்.)

சான்றுசாக்கியமிறந்திடந் ❋
தானிருந்தமையும் ❋
தோன்றிடாவிடம்பரசுழுத்தியதெனத் ❋
துணிந்தேன். ❋

(கருத்து.)

சாக்கிரமுதலாய்த்தன்னுணர் வினையும் ❋
நோக்கிடாத்தல்ம்பரசுழுத்தியாமென்றது. ❋

(பொருள்.)

சான்று—யாவைக்கு மேலாகச் சேஷித்து நின்றசாக்ஷிபும்சாக்கியம்—அஞ்ஞானங்களைக் கடந்துநின்ற சாக்கியமும் - இறந்திடம்-அத்தமித்து உபசமமாகிய - தானிருந்தமையும்- தானிருக்கின்றதையும்- தோன்றிடாவிடம்பரசுழுத்தியதெனத்துணிந்தேன்-- அறியாதஇடத்ல்தபரசுழுத்தியாகதரிசித்தேன்.எ-று.

இதன்பதசாரம்— தானேதானுயகண்டப ரிபூரணமாய்சமஸ்தமு முணர்வுற்றவற்றிற் கும் பொதுவாகவிருப்பதென்பார் சான்றென்றும்-பூர்வசஞ்சிதந் தொலைய விஷயேந்திரியரூபமாயாகாமிய நீங்கிற்றென்ற வாதனையான அஞ்ஞானமுங்கடந்த உணர்வென்பார் சாக்கியமென்றும்-சிதாபாசத்துவம் அத்தமித்து கூடஸ்தசைதன்னியமும் பிரமசைதன்னியமும் ஏகமானதென்பார்-இறந்திடமென்றும் -பெத்தத்திசையிற் சிற்றுணர்வு முத்தித்திசையில் பேரறிவுமாகியதென்பார் தானிருந்தலையுந் தோன்றிடாவிடமென்றும்- இரண்டாம்பாழெனபார்-பரமுத்தியென்றுங் கூறினர்.

இதற்குதாரணம்.

நோக்கிமுன்வினையறநுகர்வுறுவிடைய *
நோக்குமிந்துயங்களின்போக்கறுத்தகத்தே
தாக்கியவாதனைதனையுந்தவிர்த்துத் *
தமத்தினைக்கடந்துணர்சாக்கியதாக்கி *
சாக்கியசான்றுமத்தமித்துநின்றெளிருந் *
தற்சுரூபமுமுடசமித்துணிலோன்றத் *
தூக்கினனேசுரூபானந்தச்சுடரோ *
சுந்தரனேபள்ளியெழுந்தருளாயே. *

(என்றும்.)

இதமகமறவிருவிவண மென்றருளி ❋
எழில்பரசுழுத்தி யாரணுறியற்றதுவாம் ❋
அதீதமதிதுவஜஹர்லக்ஷணை யதனால் ❋
ஆசறும்சொல் லுறுபாழிரண்டாய்ப்பாழ் ❋
பொதுவதிபுகவதுபோந்தடமன்றிப் ❋
போதமுமழுங்குமவ்வியாகிருதமிறுகல் ❋
பதியுடல்சதாசிவபராசத்தியருளப் ❋
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. ❋

என்பதனாற்காண்க. (௯௩)

(மேல் பரதுரியத்தை உரைக்கின்றார்.)

மரித்ததென்றுணர்ந்துரைத்ததும் ❋
மரித்திடந்தனிலே ❋
தெரித்தபோதமேயதுபர துரியமாய்த் ❋
தெளிந்தேன். ❋

(கருத்து.)

ஊன்றியநனவுடனுற்றதுமூன்றும் ❋
தோன்றிடாவிடம்பர துரியமென்றுரைத்தது.

(பொருள்.)

மரித்ததென்றுணர்ந்துரைத்ததும்—இறந்ததென்றறிந்து வசனிக்கப்பட்டதும்-மரித்திடந்தனிலே—இறந்தவிடமாகியவிடத்திலேதீ

ன்று-தெரித்தபோதமே— அறிவித்தஅறிவா
கின்றதே-அதுபர துரியமாய்த் தெளிந்தேன்—
தத்பரமாகிய துரியமென் றறிந்தேன். எ-று.

இதன்ருற்பரியம்.

தற்போதஇழப்பிலே நின்றவுணர்வுமதன்
வாசனையாகியவாக்குமாகியவிரண்டு மிறந்துள
விடமானந்தாதீதமென்பார். மரித்ததென்று
ணர்ந்துரைத்தது மரித்திடந்தனிலே யென்று
ம்-அவ்விடத்தினில வசமுற்று அதுனென்பதுநா
னதுவென்பதுமற்றுதானே தானுவதென்பார்
தெரித்த போதமே யது பரதுரிய மென்றுங்
கூறினர். (கூஎ)

(மேல்குருசாக்ஷித்தையுரைக்கின்ருர்.)

இறையெனும்பொருட் டுரியமே *
என்னையாண்டவளே *
மறையினந்தநற்பதப் பொருணனவென *
மதித்தேன். *

(கருத்து.)

மூப்பதமுடிவினில்மூலகாரணமதாம் *
நற்பொருணனவெனநாடியுரைத்தது. *

(பொருள்.)

இறையெனும்பொருட் டுரியமே—யாது
க்குமேலென்று சொல்லும் பொருளாகியபிர

ஹமே-என்னையாண்டவனே—அடியேனை அடி மைகொண்டாண்டருளுநேய்பொருட்டு திருமேனிகொண்டெழுந்தருளுங்குருநாதனே - மறையினந்தநற் பதப்பொருளை வெனமதித்தேன்—வேத முடிவாகிய சுத்த தத்பதார்த்தமே குருசாக்கிரமாக நிச்சயித்தறிந்தேனை. எ-று.

எ-அலச-குருவேபிரமம் பிரமமேகுருவென்பார் இறையெனும்பொருட்டுரியமேயென்னையாண்டவனே யென்றுகூறினார்.

(உதாரணம்.)

அருவமுமுருவமுமாகியபொருளே *
அதீதமென்றருளியவழித்ததுவறிந்த *
பொருளுணர்வதுபரமவிசிட்டவாக்கியத்தால்
பொருவில்சிற்சுவவிதை தற்பதப்பொருள
இருநிலமனமுதலருளியபரிசே [துவாம்
எழிலிருபூரணத்தியல்குருதனவில் *
பரமுறவெனதெழுபவமறுத்தருளப் *
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. *
என்பதனுற்காண்க. (௯௮)

(மேல் தருப்பதப்பொருளைத்தொகுதியாக்கின்றார்.)

பண்டைவிச்சுவாதனைப் *
பழுதுபோய்முழுதும் *

கண்டகண்ணதேயாயவக் *
கனவதுங்கண்டேன். *

(கருத்து.)

தாமுயிர்யாவையுந்தானாய்நிறைபரம் *
பிரகாசங்குருகனவென்றுரைத்தது. *

(பொருள்.)

பண்டை—பூருவத்தோற்றுகின்ற- விச்சுவம்—உலகாதிகளினது- வாதனை—துன்பமாகின்ற-பழுதுபோய்—குற்றநீங்கி- முழுதும்—அசேஷமும்-கண்ட—ஆடியைப்போலறிவுற்றுநின்ற-கண்ணதேயாய—இடமேயாகின்ற-கனவதுங் கண்டேன்—குருஸ்வப்நத்தை தரிசித்தேன். எ-று.

காரணோபாதிகழன்றுவிளங்காநின்றதத்ஸ்வரூபமே விஸ்வக்கிராஸம் பண்ணியதென்பார் பண்டைவிச்சுவ வாதனைப் பழுதுபோயென்றும்-காரிய காரண வுபாதி அசேஷமும் அறிகின்ற அறிவு ஆடியிற்காட்சிபோலென்பார்-முழுதுங்கண்ட கண்ணதேயாயவக் கனவென்றுங்கூறினார்.

(உதாரணம்)

மம்மறுகுருபதகனவினின்மருவு *
மாசறுமாணவசாத்திகமதனால் *

உலகமொடுயிருந்தன்மாத்திரபரமா *
யுணர்ந்தது வேபிரசாபத்தியென்றருளி *
தில்லியபரமமதாபவைமுழுதும் *
நிகழ்ந்ததின்றெற்கென நெடியவர்முதலே
பல்வுலகுண்டதுமிது வெனவருளப் *
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. *
என்பதனாற்காண்க.. (௬௬)

(மேல் துருசுழுப்தியை உரைக்கின்றார்)

காக்ஷியாவையுங் கண்ணதாவக் கணுங்கரைந்து
மாக்ஷியாகியவகோசர வுறக்கமாய்மதித்தேன்.

(கருத்து.)

கட்டமிலாதமிகண்ணினுமொன்றும் *
சுட்டிலாவதுசெசுழுப்தி யென்றுரைத்தது.*

(பொருள்.)

கண்ணதா—பார்வைக்குரியதாக - காக்ஷியா வையும்— கண்டறிகின்றதாகிய அசேஷமும். அக்கணுங்கரைந்து—அந்தப்பார்வையுங்கரை வுற்று - மாக்ஷியாகியவகோசர—மனவாக்குக ளாலறியவொண்ணாதவெட்டுமையை - உறக்கமா ய்மதித்தேன் — ஆதியந்தசூனியமாக தரிசித் தேன். எ-று.

தேவதத்தனை நோக்கி அவனை இவனாய் அக் காலமிக்காலம்நோக்கிக்கண்டதென்பார்-காக்ஷி

யாவையுங் கண்ணதாமென்றும் உபாதிகளை நீக்கி ஒருவனை மேரா மென்பார் அக்கணுறுங் கலாந்தென்றும்— ஆதியந்த சூனியமாயளவி டப்படாததாய் ஞானந்த பூரணமென்டார் மாகுகிபாகிய அகோசரவுறக்கமாய் மதித்தே னென்றுங் கூறினர்.

(இதற்குதாரணம். பள்ளியெழுச்சி.)

சீரணிஜகஉஜகர்லக்ஷணைபதறாற் *
செகமுழுதுண்டதோர்செருக்கறமிகவே *
ஏர்குருசுழுப்தியிலிருந்துடசாந்தம் *
இருபதப்பொருளும்பொன்றுகிறின்றொளிர *
ஒருடவுயிரறியொண்பரமுழுதும் *
ஒன்றுமுட்பாழுமாயிரந்திடமதவாய் *
பாரியல்சலமவுநற்பிருதிவியென்றருளாப் *
பரிபூர்ணனேபள்ளியெழுந்தருளாயே. *

என்பதனுற்காண்க.

ஜஹுஉஜகர்லட்சணை யென்பது- விட்டுவிடாதலக்ஷணை. இவ்வைதை மூன்றுவது பாமெனை யறிக. (௩)

(மேல்குருதுரியத்தை புணர்க்கின்றார்.)

அருந்தவாமறைக்கந்தமாமகோசரந்தனிலே *
இருந்தவாறறிவித்தசிரோங்கமயிலசக்கேன். *

(கருத்து.)

அருமுடிவுமறைசவானுபவமாம் *
குருவருள்கோசரங்கூட்டியதுரைத்தது. *

(பொருள்.)

அருந்தவா—அரியதவமயமாகிய குருமூர்த்தியே - மறைக்கந்தமாமகோசரந்தனில்—வேதத்தினந்தமா யறியவொண்ணாத விடந்தனில்-நீயிருந்தவாறு—தேவரீரிருக்கின்ற வியல்பினை-அறிவித்த சீரெங்ஙனமிசைக்கேன்—அடியேனுக்குத்தெரியச் செய்தஞானத்தை எவ்விதமாகச் சொல்லுவேன். எ-று.

அனைத்துமா யனைத்து மில்லாயிருக்கின்ற தன்னைத்தன்னிடத்துத் தானயிருந்துவிளக்கி அரியதவப்பயனாற் பெறும்பேறே தாமாய் நிறைந்ததென்பார். அருந்தவாவென்றும்—சுருதி முடிவு மறிதற்கரிய முப்பாழுங் கடந்த சூன்யமென்பார்- மறைக்கந்தமா மகோசரந்தனிலென்றும் — துரிய சம்பூர்ண மௌனானந்தஸ்வானுபூதியை விழியா லறிவித்ததென்பார்-நீயிருந்தவாறறிவித்த சீரெங்ஙனமிசைக்கேனென்றுங் கூறினர். இவை யனைத்துஞ் சற்குருவருளா லுணர்க. (ளக)

(மேல்இருவுமது.)

எம்பிரானிடந்தொறுமிடந் ※
  தொறுமதுவதுவாய் ※
தம்பிரானடஞ்செயும்வகை ※
  சாற்றுமாறறியேன். ※

(கருத்து.)

எவ்விடம்பார்க்கினுமவ்விடமதுவாய்ச் ※
செவ்வியோனின்றதுசெப்பரிதென்றது. ※

(பொருள்.)

தம்பிரான்—எப்பொருட்குமேலாகியகடவுளே-எம்பிரான்—எமதிறைவனே - இடந்தொறுமிடந்தொறும் — எவ்வெவ்விடங்களை நோக்கினும்-அதுவதுவாய்—அவ்வவ்விடங்களுக்குத்தகுந்தஅதுவதுவாய்-நடஞ்செயும்வகை—தேவரீர்நடிக்கின்ற கூறுபாட்டினை-சாற்றுமாறறியேன்—உரைப்பதற்கு வகையறிகின்றிலேன். (எ-று.)

தனதுடல்பொருளாவிமூன்றையுங்கையேற்றடிமைகொண்டி ரக்ஷிக்குந்தேசிகோத்தமனே யென்பார்.எம்பிரானென்றும் — ஜீவசாக்ராதிதுரியாந்தமென்பார் - இடந்தொறுமிடந்தொறுமென்றும்— நனவாதிதுரியாந்தங்களில் அதற்கதற்குரியவியல்பாய்நின்றதெ

ன்பார்அதுவதுவாயென்றும்-பிரமாதிகள்தம்
பாரதந்த்ரானுபவிளங்குவதை புரைப்பதவாங்
மானஸகோசரமென்பார்-நடஞ்செயும்வகை
சாற்றுமாறறியேனென்றுங் கூறினர். (ஙஅ)

{ மேல்சீடனதுவின்னப்பம் }
{ அருளிச்செய்கின்றார். }

ஆவியேயடியேன்செய்கை ❋
மாறாவெனினும் ❋
பாவியேனதுதானுமுன் ❋
னுடையதாம்பண்டே ❋

(கருத்து.)

அடிமைகைமாறினுக்காவியோடெல்லாம் ❋
உடையநீயெனக்கொன்றுண்டோவென்றது.

(பொருள்.)

ஆவியே — உயிருக்குயிராய் நின்ற ஐய
னே-அடியேன்செய்கைமாறாவெனினும்--
அடிமைசெய்யவேண்டிய கைமாறுண்டாயிரு
க்கின்றதென்றாலும்-பாவியேனதுதானுமுன்
னுடையதாம் பண்டே—அடியேனுக்கு சுதந்
தர மில்லாத உடலாதி முன்னமே தேவரீருக்
குரியதானதாகையால்.எ-று.

(ஙக)

சாரம்—ஆசாரியர் பிறவாநெறியை அநுக்கிரகஞ்செய்ததற்கு சீஷன்குருதெக்ஷிணை செய்வதியல்பென்பார்-அடியேன் செய்கைமாறுளவெனினுமென்றும் உடல்பொருளாவி மூன்றும் அடிமைகொண்டவன்றே - கைக்கொண்டபின்பு தனக்கோர் சுதந்தரமின்றென்பார்-பாவியேனது தானுமுன்னுடையதாம் பண்டேயென்றுங் கூறினார்.

(இதற்குதாரணம். திருவாசகம்.)

அன்றேயென் றனாவியுமுடலு
முடைமையுமெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்
கொண்டபோதேகொண்டிலையோ
இன்றோரிடையூறெமக்குண்டோ
எண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்
நானோவிதற்குநாயகமே.
என்பதனாற்காண்க. (௱௩)

(அவதாரிகை.இதுவுமது)

ஆவல்செய்தெனதாக்கையுள்
ளாவுநின்னடியார்க்

கேவல்செய்வதேயன்றிமற் *
றொன்றுமாறறியேன். *

(கருத்து.)

நின்னடியார்க்கேவல்நேசிப்பதல்லது *
மன்னுகைமாறுவேறிலையென்றுவாத்தது. *

(பொருள்.)

எனதாக்கையுள்ளளவு நின்னடியார்க் காவல் செய்து—அடியேனது தேகமுள்ளளவுந்தேவரீர் திருவடியடியாரிடத்தி லன்புதாங்கி-ஏவல் செய்வதேயன்றி மற்றொன்றுமாறறியேன்— பணிவிடை. செய்கின்றதேயல்லது வேறொன் றுங் கைமாறு செய்ய அறியேன். எ-று.

(இதற்குதாரணம். சூதசங்கிதை.)

பரம்பொருடானுந்தேசிகர்தமக்குப் *
பணிசெய்வோர்பணிசெயும்போகி *
அரன்றிருமால்மற்றுள்ளதெய்வந்தனினும் *
அதிகமாந்தெய்வமிக்கென்றால் *
தெரிந்தவன்மகிமைசெப்பொணுதவன்றாட் *
பணிசெய்வோர்பதங்களென்சிரத்தில் *
திருந்தவைத்தவர்பேணுயவொருதெய்வ *
முண்டெனச்சிந்தைசெய்யேன். *
என்பதுங்காண்க. (௱௬)

இறவிலெப்பதமும்பெற
வேண்டிலேனென்றும்
பிறவிவேண்டுவ னின்திருப்
பணிசெயப்பெறினே.

(கருத்து)

உற்பவமாகினேற்குற்பவமுறுமெனின்
திருப்பணியெப்பவுநேடுவெனென்றது.

(பொருள்.)

பிறவி—சநநத்தையும் - இறவிலெப்பதமும்பெறவேண்டிலேன் — லயமில்லாத வெத்தன்மைப்பட்டபதத்தையும் பெற்றுக்கொள்ள விச்சித்துவேண்டுகின்றிலேன் - பிறவி பெறின் — அதவாசநநம் வருமாகில்-என்று நின்திருப்பணிசெய வேண்டுவன் — எப்போதுந் தேவரீருடையபணிவிடைசெய்துகொண்டிருக்கதாக வேண்டுவன். (எ-று.) பிறவியென்றவைத இரண்டிடத்துங்கூட்டுக.

இதற்குதாரணம்
(தாயுமானஸ்வாமிசாத்திரம்.)

மறமலியுலகவாழ்க்கையேவேண்டும்
மற்றுநின்னன்பர்தம்பணியாம்

அறமதுகிடைக்கினன்றியானந்த *
வற்புதநிட்டையிலிமித்தந் *
துறவதுவேண்டுமௌனியாயெனக்குத் *
தூயநல்லருட்ரிவின்னம் *
பிறவிபுவேண்டும்டாலெனதிறக்கப் *
பெற்றவர்பெற்றிடும்பேறே. *
என்பதனாற்காண்க. (௧௫)

மேல்மாணாக்கன் ஆராமையை
அருளிச்செய்கின்றார்.

என்றுபலகால்விழுமெழுந்தொழு *
மழும்புரியதென்னையினியான் *
றின்றுபலவாகவுரைசெய்புமவனன்பினொடு *
நெஞ்சுருகியே. *

(கருத்து.)

அன்பினொடுருகிமெய்யானந்தமேலிடத் *
தன்பிடித்தார்போற்றொழுதனனென்றது. *

(பொருள்.)

அவனன்பினொடுநெஞ்சுருகி — அத்தச்சசி வர்ணன் அன்பினோடும் அனலைக்கண்டநவநீதம்போலமனநெகிழ்ந்து பலகால்விழுமெழுந்தொழும் — அனேகந்தரமாகவணங்கவிழுவான் எழுந்து நிற்பான் திரும்பவும்வந்தனஞ்செய்வா

ன்-யானினிட்புரிவதெனவினையென்றழும் — அ
டியேனினிச்செய்யத்தக்கவை யென்னையிருக்
கின்றதென்று கண்ணீரோடும்படி அழுதபு
லம்புவான்-நின்றுயவ்வாகவுரைசெய்யும்— அ
ஞ்சலி அத்தனாகநின்றுகொண்டு அநேகவிதமாக
கத்தோத்திரஞ்செய்வான். எ-று. (௩௯)

{ மேல்குருகடாக்ஷவல்லபம் }
{ புகழ்ந்தருளிச்செய்கின்றார். }

எட்டிலறிவின்றியிறைதன்னிலயல் *
பின்றியிவ்வுடம்பினுடனே *
விட்டிலுறைவானையினிவீடுபெறு *
கின்றதைவிளம்பலிலனே. *

(கருத்து.)

பிறவாநெறியருள்பெருமைசெய்குரவன் *
இறவாப்பெருமையியம்பொருதென்றது

(பொருள்.)

அறிவின்றி—அறிவென்பதுளெட்டுணையுமில்லாது- எட்டில்—ஆசைவலையிலகப்பட்டு-விட்டிலுறைவானை—பிராயமாமுருடொத்தவறவேனை- இனி—இப்பொழுது - இவ்வுடம்பினுடனே—இந்தத்தேகத்துடனே - இறைதன்னிலயல்பின்றி—குருவாகிய தனக்கன்னியமில்லா

ஙல்-விடுபெறுகின்றதை—மோக்ஷத்தைப்பெ ற்றுக் கொள்ளச்செய்த ஆசாரியர் பெருமை யைவிளப்புகிலனே—அளவுபடுத்திச் சொல்ல மாட்டேன். எ-று. (௱எ)

{சசிவர்ணன்பிதிர்க்களடைந்த நற்கதியைக்கூறுகின்றார்.}

வஞ்சவலியானரகின்வாழ்பிதிர்கள் ✱
பாழ்படுவதாகவருளின் ✱
விஞ்சைவலியாலடையவேறினர் ✱
சுராதியர்கண்மேலுலகமே. ✱

(கருத்து.)

நரகம்விட்டிவன்முன்னோர்நாகவாழ்வுற்றனர் ✱
பிரமஞானத்தினற்பெருமையாலென்றது. ✱

(பொருள்.)

வஞ்சவலியானரகின்வாழ்பிதிர்கள்—கொடு மையினது வலிமையினால்நரகத்தில் வீழ்ந்து கிடந்தவிவன்குலத்துப் பிதிர்க்களனைவரும்— அருளின்விஞ்சைவலியால் பாழ்படுவதாக— அருள்விளங்கியபரஞானத்தினது வலிமையி னால்நரகம்பாழடைவதாகும்படி -அடையவே றினர் சுராதியர்கள்மேலுலகமே—எல்லவரும்

நரகக்கரையிலேறிதேவர்கட்குரியசுவர்க்கலோ கத்திருந்துவாழ்கின்றனர். எ-று.

(இதற்குதாரணம். சநகஸைதை.)

சகலமுநாமரூபங்களின்றிச் *
சச்சிதானந்தமாக்காண்போன் *
சகலசம்பன்னனவன்குலத்தோருந் *
தகவுறுதென்புலத்தவரும் *
சகலரும்பிறவாவீட்டினைப்பெறுவர் *
தாழ்விலைச்சத்தியஞ்சநகர் *
சகலவேதாந்தமுடிவுகளாலுஞ் *
சாற்றவுமவன்புகழ்முடியா. *
என்பதனாற்காண்க. (௱௮)

{ மேல்சசிவர்ணன்பெருமையை அருளிச்செய்கின்றார். }

தேவருமனித்தருமிவன்றொழில் *
வியந்தனாசெயத்தகுவதோ *
மூவரும்விளம்பமுடியாதிவனை *
ஏவல்செயமூர்த்திறவரோ. *

(கருத்து.)

பொருந்திவன்குருபணிபுகழ்ந்துதேவர்களாரர், திருந்துமவர்களனாசெயவரிதென்றது. *

(பொருள்.)

இவன்றொழில் வியந்துமூவரும் விளம்ப முடியாது — சசிவர்ணன் குருபணிவிடைத் தொழிலினதருமையை அதிசயித்து மும்மூர்த்திகளாலுஞ் சொல்லமுடியாது - தேவருமனித்தருமுனா செயத்ததுவதோ---- தேவர்களாலு மனிதர்களாலும் வியந்துசொல்லமுடியுமா - இவனதேவல்செயமுந்துறுவரோ — சசிவர்ண னுக்குபணிவிடை தாங்கள்செய்வதற்கு எனக்குமுந்தவெனக்கு முந்தவென்று வந்துபொருந்துவர்கள். (எ-று.) (௱௬)

{ மேல்ஞானவானது பெருமையை அருளிச்செய்கின்றார். }

ஞானியைநரன்சுரனெனுதொழிக *
ஞாலமுயநாதனருளால் *
மேனியதுகொண்டுதனைநல்கவரு *
மென்றறையும்வேதமுடிவே. *

(கருத்து.)

நரன்சுரன்ஞானிகளென்பதுநன்றல *
பிரமமேஞானியாம்பேதமன்றென்றது. *

(௰அ)

(பொருள்.)

ஞானியைநரன்சுரனென்றொழிக — பரஞானிகளைமனிதனென்றுந்தேவனென்றுஞ் சொல்லுகின்ற சொற்களைநீக்குக - (அஃதேனெனில்) ஞானமுடையநாதனருளால் — உலகங்கடைத்தேறும்பொருட்டு - பரமேதமதுகாருண்ணியத்தினாலே — மேனியதுகொண்டுதனைநல்கவருமென்று - மானிடவுருவமாகத்திருமேனிகொண்டுதம்மைக் கொடுத்தருளவருமென்று — வேதமுடிவரையும் - வேதாந்தங்களெல்லாம் வசனிக்கும். (எ-று.) (௩௰)

இதற்குதாரணம்

(சூதகீதை.)

கனவினிற்காணுங்காட்சிபோற்சகத்தைக் *
காணுமெய்ஞ்ஞானிகடம்மை *
மனுடரேயென்றித்தேவனென்றெண்ணு *
மனநினைவிருத்தியைமாற்றி *
இனையனபரமசிவனுருக்கொண்டிவ் *
வுலகுய்யவெழுந்தருளினனென் *
றினையவைநினைப்போருத்தமரல்லோ *
ராழியைநோக்குமந்தகரே. *

என்றும் பாடுதுறை.

முகுந்தனுநான்முகனுந்தேட *
மூலமொருகுருமூர்த்தியாகிப் *
புகுந்தடியார்தொழவீற்றிருக்கும் *
பூங்கோயிலாசநான்பெற்றிலேனே. *

என்பதனாற்காண்க.

சிவஞானபோதம்.

வெண்பா.

சிரகிரிமாமலைவாழ்ஞானமூர்த்தி *
யிருதாளுளத்திருத்தக்கொண்டாற்-குலாயெற்குக் *
காட்டிய வண்ணலைங் கழற்றேனென் கற்றுணர்ந்
தாட்டமுற்றுச்செய்யார்நகை. [தோர்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

திகழுமெனதுளத்திருக்கு மம்பலவாணக்குரு
வினருளாற்சிந்தைத் ❋
துகளறுக்குஞ்சிவஞானபோதத்திற் ❋
குறைதெரிந்தவளவிற்சொற்றேன் ❋
றகவின்மொழியெனினுமிளங்குழவியின் ❋
வாய்வரின்மகிழுந்தந்தைப்பாலச் ❋
சகமதனிலெனதுரையையிகழாமற் ❋
கொள்வர்கலைதெரிசான்றோரே. ❋

பன்னும்பெருநூலுணர்ந்தவறி ❋
வினர்முன்சின்னூல்படித்துமதி ❋
இன்னபோதந்தனக்குரையான் ❋
வகுத்ததென்போலிருக்குமெனிற் ❋
றன்னையுணரானிருவிழியாற் ❋
சகத்திற்சிலதையறிந்துள்வெளி ❋
மன்னும்பொருள்கண்முற்றுமுணர்ந் ❋
தவன்போலுரைக்கும்வாறுமே. ❋

முற்றிற்று.

ஸ்ரீதாயுமானஸ்வாமி சரணாலையன்

(அருணாசலம்.)

பிழை திருத்தல்.

பக்கம்	வரி	பிழை	திருத்தல்.
௬௬	௰௭	அகத்த	அகத்தை
௬௪	௯	காவா	கரவா
௪௬	௰	வது	வந்து
௪௯	௰௮	கனகளையும்	கண்களையும்
௫௧	௰௯	பூதலளையர்	பூதலவளையர்
௭௮	௰௩	ஒன்றிகழ்	மூன்றிகழ்
௱௰	௧	காலத்	காலந்
௱௰	௧	தர்பதம்	தத்பதம்
௱௰	௨௰	பதத்திய்கத்தம்	பதந்திரகாத்தம்
௱௩	௰௨	மஞ்சபான	மஞ்சமான
௱௫	௰௯	ிருக்கின்றுவொன்று	இருக்கின்றுவென்று
௱௭	௭	தோமாவதி	தோதாவதி
௱௰	௰௩	விந்தார்	விர்தகாம்
௱௯	௰௭	கரியப்பொருள்	கரியதற்பொரு
௱௭	௫	வழங்கிடல்	வழங்கிடல்
௱௨௯	௰௯	டிருக்கதக	டிருக்கத்தக்கதாக